# இனமொழி உணர்ச்சியும் கவிதை எழுச்சியும்

பேராசிரியர்
க. அன்பழகன் எம்.ஏ.,

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# இனமொழி உணர்ச்சியும் கவிதை எழுச்சியும்

[சொற்பொழிவு]

'இலக்கியத் தென்றல்'
பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ.,

**பாரதிதாசன் இலக்கியப் பேரவை,**
124/3, பாரதி குடியிருப்பு,
அண்ணாநகர், சென்னை—600 040.

முதற்பதிப்பு : டிசம்பர், 1988

[பேராசிரியரின் 67 ஆவது பிறந்த
நாளை முன்னிட்டு (19—12—88)
இந்நூல் வெளியிடப்படுகிறது.]

விலை ரூ. 5-00

தொகுப்பு : செல்வி பா. கலையரசி [பி.ஏ.]

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை—600 108.

முத்து நிலைய வெளியீடு

---

கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

## ○ தமிழ்க்கடல் அலைஓசை

"...அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அண்ணா கண்டெடுத்த கொள்கை முத்துக்களில் ஒன்றுதான் பேராசிரியர் அன்பழகன். அவருடைய கருத்தழகும், தமிழ்க் கட்டழகும் மேடையில் கண்டு மகிழ்ந்தோம். இதோ... கோடையிலே இளைப்பாற்றும் குளிர் தருவென எழுத்துருவில் காணுகிறோம் இந்நூலில்! இளைய தலைமுறைக்கு இந்த நூல் இனிய தமிழ் அமுது! எழுச்சி விருந்து!!"

— 'இலக்கிய ஞாயிறு'
கலைஞர் மு. கருணாநிதி.

# நுழைவாயில்

'இன்றோ, மேடைப்பேச்சு காலத்தின் தேவை; மக்களாட்சியின் அடித்தளம்; உரிமை உணர்வு வெளிப்படும் முரசொலி; தனிமனிதன் அறிவாற்றலைச் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்யும் ஊருணி...'

—மேடைப் பேச்சு பற்றிய இம்மதிப்பீட்டை வழங்கிய மானமிகு பேராசிரியரின் அறிவாற்றலால்— உணர்ச்சிப் பெருக்கால்—உருவான சொற்பொழிவுகளை, தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்யும் நோக்குடன் இக்குறு நூலாக வடிவமைத்து வழங்குகின்றோம்.

பேச்சாலும் எழுத்தாலும் தமிழினத்திற்குப் பெருந்தொண்டாற்றிவரும் பேராசிரியர் அன்பழகனாரின் பேராற்றலை—பேச்சுத்திறனை—இத்தமிழ் கூறு நல்லுலகு நன்கு அறியும்.

'கொள்கையில் தெளிவு; அரசியலில் துணிவு; நண்பர்களிடத்தில் கனிவு; பெரியோர்களிடத்தில் பணிவு' ஆகியவற்றின் சங்கமமான பெருமைமிகு பேராசிரியரின் அறுபத்தேழாவது பிறந்த நாளான இன்று, இச்சிறு நூலை அன்னாருக்குக் காணிக்கையாக்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அமைப்பாளர்

சென்னை—40
19—12—1988 } பாரதிதாசன் இலக்கியப் பேரவை.

# இனமொழி உணர்ச்சியும் கவிதை எழுச்சியும்

பெருமதிப்பிற்குரிய விழா நிகழ்ச்சியினுடைய தலைவர் என்னுடைய அருமை நண்பர் புலவர் அழகுவேலனார் அவர்களே! மாநில இலக்கிய அணியினுடைய துணைத் தலைவர் அருமை நண்பர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களே! கவிஞர் வேழவேந்தன் அவர்களே! பேராசிரியர் அமீது அவர்களே! வழக்கறிஞர் என். வி. என். சோமு அவர்களே! டாக்டர் நாகு அவர்களே! முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட தொழிலதிபர் மருதை அவர்களே!

கவிதை நூல் இயற்றி நம்முடைய பாராட்டுதலை யெல்லாம் பெறுகின்ற தகுதி வாய்ந்த பேராசிரியர் மு. பி. பாலசுப்பிரமணியம் அவர்களே! ஆசிரியப் பெரு மக்களே! இளங்கவிஞர்களே! எழுத்தாளர்களே! நண்பர் களே!

நடைபெறுகின்ற இந்த விழாவில் ஒரு நூல் வெளி யீட்டு விழாவில் எத்தகைய சிறப்பினை நாம் காண வேண்டுமோ அவ்வளவு சிறப்பினையும் நம்முடைய அருமை நண்பர்கள் தம்முடைய உரையினாலே நிறை வேற்றி இருக்கிறார்கள். நூல் வெளியீட்டு விழா என்பது ஒரு நூலை வெளியிடுவதற்கு வழியில்லாத காரணத்தால் நடத்தப்படுகின்ற விழாவாக இல்லாமல் வெளியிடப்

படுகின்ற வாய்ப்புள்ள நூல் — தகுதியுடைய நூல் — சிறப்பு வாய்ந்த நூல் — என்ற உண்மைகளை அதற்குரிய தகுதி உடையவர்களே எடுத்துச் சொல்லுகிற ஒரு சிறப்புக்கு அடையாளமான நிகழ்ச்சியாக இந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விழாவிலே தலைமை ஏற்றிருக்கிற அருமை நண்பர் புலவர் அழகுவேலனார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என்னோடு பயின்றவர்; என்னோடு பயின்றவர் என்பது மட்டுமல்ல; என்னோடு உடனிருந்து தந்தை பெரியாருடைய தன்மானக் கொள்கைகளைப் பரப்புகிற அந்தப் பணியிலேயும் இந்தி எதிர்ப்புத் தொண்டிலேயும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒருவர். அந்த நாள் முதலாக இந்த நாள் வரையில் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகள் எதுவாக இருந்தாலும் தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளில் உறுதியாக இருந்து செயல்பட்ட ஒரு செம்மல் என்ற வகையில் கொள்கை உரம் வாய்ந்த ஒருவருடைய தலைமையில் இந்த விழா நடப்பது மிகவும் பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும்.

அதைப் போல இந்த விழாவில் வாழ்த்துரை வழங்கிய அருமை நண்பர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள், இந்தக் கொள்கைக்காகத் தம்மை ஒப்படைத்துக் கொண்டு கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து தம்மால் இயன்ற வகையிலே எல்லாம் பணியாற்றி வருகிற ஒரு வீறுகொண்ட தமிழர் என்ற பாராட்டுக்கு உரியவர்.

இந்த விழாவிலே பாராட்டிப் பேசிய நம்முடைய அருமை நண்பர் வேழவேந்தன் அவர்கள் கவிஞரைப் பாராட்டுவதற்குரிய தகுதியுடைய ஒரு கவிஞர். அவரும் மிகச் சிறந்த கவிதைகளை இயற்றி, தமிழ்நாட்டிற்கு

தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு மிகுந்த ஆர்வத்தைத் தோற்றுவித்திருப்பவர். அவர் அமைச்சராக இருந்ததை மக்கள் மறந்தாலும் அவர் கவிஞர் என்பதை நாட்டு மக்கள் மறப்பதில்லை. நிலையான புகழ் அவருக்குக் கவிஞர் என்பதுதான். அது என்றைக்கும் நிலைக்கும். அதை யாரும் பறிக்க முடியாது. அதைப்போல் மணிவேந்தன் அவர்களைப் பாராட்டிப் பேசிய வழக்கறிஞர் என். வி. என். சோமு அவர்கள் மாணவராக இருந்த நாள் முதல் இந்த இயக்கத்திலே ஈடுபட்டு இந்தக் கொள்கைகளுக்காகத் தம்மாலே இயன்ற வகையி லெல்லாம் பணியாற்றி வருகிற ஒருவர். அவருடைய தந்தையார் என். வி. என். அவர்கள் ஆற்றிய அந்தத் தொண்டு தொடர்ந்து சோமு அவர்கள் வாயிலாக இன்றைய தினம் நாட்டுக்குக் கிடைத்து வருகிறது. அந்தத் தொண்டோடு தம்மோடு பயின்ற மாணவர் தகுதி வாய்ந்த ஒரு கவிஞராகி அவருடைய நூல் வெளியிடப் படுகின்ற நேரத்தில் நண்பர் என்ற முறையிலேயும், ஒரே காலத்தில் பயின்றவர் என்ற முறையிலேயும் அவர் கலந்து கொள்வதிலே ஓர் இயல்பான பொருத்தமும் சிறப்பும் இருக்கின்றன.

அடுத்து இங்கே பேசிய டாக்டர் நாகு அவர்கள், கவிதையை ஆராய்வதற்குரிய ஆராய்ச்சித் திறன் வாய்க்கப் பெற்றவர். ஓர் ஆராய்ச்சியாளர். ஓர் ஆராய்ச்சியாளராலேதான் கவிதையின் நலன், குறைபாடு எந்த இடத்திலே ஏற்படுகிறது என்பதைக் காண முடியும். எனவே ஓர் ஆராய்ச்சியாளர் சான்று பகர்கிற முறையில் டாக்டர் நாகு அவர்கள் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார் என்று நான் கருதுகின்றேன். அதுவும் மணிவேந்தன் அவர்களுக்குக் கிடைத்திருக்கிற சிறந்த பாராட்டு.

இறுதியாக இங்கே பேசிய என்னுடைய நண்பர் அமீது அவர்கள் உண்மையிலேயே ஒரு சுவைஞர் என்று

பாராட்டப்பட வேண்டியவர். கம்பருடைய இலக்கிய மாக இருந்தாலும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கவிதையாக இருந்தாலும் வேறு சிறந்த எழுத்தாளர் களாலே உருவாக்கப்பட்ட ஏடுகள் எவையாக இருந் தாலும் அவற்றையெல்லாம் படித்துத் துய்த்து ஆழ்ந்து சிந்தித்து, சுவைபடுத்திச் சொல்லுகின்ற ஓர் ஆற்றல் மிக்க பேராசிரியர். ஒரு வகையிலே நான் குறிப்பிட விரும்பு கிறேன். அவர்கள் எல்லாம் பேராசிரியர் என்ற சொல்லைத் தங்களுக்கு உரியதாக ஆக்கிக் கொள்கிற கடமையைச் செய்கிறவர்கள். அதனாலே கடமையைச் செய்கிறவர்களுக்கு அந்தப் பெயர் வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

நான் இப்போது செய்வது பேராசிரியர் வேலை யன்று. எனவே, நான் ஏற்கனவே ஆற்றிய பணியை நான் மறந்துவிடக் கூடாது என்பதற்காக எனக்கு அந்தப் பெயர் தொடர்கிறதே தவிர, (கைதட்டல்) அந்தப் பெயர் எனக்கே உரியது என்று கருதுவதும் தவறு. ஒருவருக்கே உரியதாக ஆவதற்கு எந்தப் பெயரும் கூட எந்த வகையிலேயும் கடமைப்பட்டதுமன்று. பலபேர் பேராசிரியர்களாக இருப்பதுதான் தமிழ் நாட்டுக்குப் பெருமையே தவிர, ஒருவர் மட்டும்தான் பேராசிரியர் என்றால் அது தமிழ் நாட்டுக்கே சிறப்புடையதன்று.

### வாழ்த்துவதற்கான கடமை இருக்கிறது

எனவே அந்த வகையில் ஒரு சுவைஞர், ஒரு கவிஞர், ஒரு கலைஞர், ஒரு வழக்கறிஞர், ஒரு தமிழ்த் தொண்டர், ஒரு தமிழ் ஆராய்ச்சியாளர் அத்தனைபேரும் வாழ்த்தி இருக்கிற போது — வாழ்த்துவதற்கான சான்றுகளை எடுத்துக் கூறியிருக்கிறபோது—நான் வாழ்த்துவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் வாழ்த்துவதற்கான ஒரு கடமை எனக்கு இருக் கிறது. நல்ல முயற்சி உடையவர்களை, தமிழுக்காக—

தமிழ் நாட்டுக்காக மக்களுக்காகத் தொண்டாற்றுகிற வர்களை, அதற்குத் தேவையான அடிப்படையான குறிக் கோளை மறக்காமல் இருப்பவர்களை, அந்தக் குறிக் கோளை மற்றவர்களுக்கு நினைவூட்டுகிற ஆற்றல் பெற்றவர்களை, தமிழ் இனம் நாம் என்பதை அடிக்கடி மறந்துவிடக் கூடிய ஒரு சூழ்நிலையிலே வாழ்கிற மக்களுக்கு அந்த உணர்வை எழுப்புகிறவர்களை, தமிழ் இனத்தின் வழிகாட்டி யார் என்று அறியாதவர்களுக்கு நம்முடைய வழிகாட்டி இப்படிப்பட்ட தகுதி வாய்ந்தவர் தாம் என்பதை எடுத்துக் காட்டுகிறவர்களை நான் வாழ்த்த — பாராட்ட — கடமைப்பட்டவனாக இருக் கிறேன். ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்ற அந்தக் காரணத்தாலே அல்ல; அந்த இயக்கம் தமிழ் இனத்தைச் சார்ந்தது என்ற காரணத்தால்! ஒரு கட்சி தேவை என்பதற்காக அல்ல, தமிழனுக்கு இன்னொரு கட்சி இல்லை என்ற காரணத்தால்! (கைதட்டல்) தாய் மொழி யைப் போற்றுவதற்கு நாம் எல்லாம் முற்பட்டால் தானே தாய் மொழிக்குப் பெருமை என்ற காரணத்தாலே அல்ல, தாய் மொழியைக் கூடப் போற்றத் தெரியா விட்டால் நாம் எப்படித் தமிழர்களாக இருப்பது என்ற காரணத்தால்! (கைதட்டல்.)

**தமிழன் என்ற உணர்வும் தமிழ்ப் பற்றும்:**

இன்னொரு வகையிலே நீங்கள் ஆழ்ந்து கருதிப் பார்ப்பீர்களேயானால் நண்பர் அமீது அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள், மலேசியாவிலே அங்கே உள்ள தமிழ் இளைஞர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய் கவிதைகளைப் படித்து, துய்த்து, உணர்ந்து அந்த உணர்வுக்குத் தங்களை முழு அளவுக்கு ஆளாக்கிக் கொண்டு கவிஞரைப் போற்றுவதோடு அவர் உணர்த்திய கொள்கைகளைப் போற்றுகிற உணர்வாலே, நல்ல கவிஞர் களாகவும் வளர்ந்திருக்கிறார்கள். கவிஞர் மறைந்த

நேரத்தில் அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவு, அந்த உணர்வுக்குத் தங்களை இரையாக்கிக் கொண்டார்கள். அந்த உணர்வு கடல்மடைபோல் அங்கே பேரளவு பெருக்கெடுத்து ஓடியது என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். மலேசியாவிலே மட்டுமல்ல இலங்கையாக இருந்தாலும் அல்லது சிங்கையாக இருந்தாலும் அல்லது மேற்கு நாடுகளிலே அல்லது மத்திய மேற்கு நாடுகளிலே சென்று வாழ்கிற தமிழர்களாக இருந்தாலும் அவர்களுடைய உள்ளங்களிலே எல்லாம் இந்தத் தமிழன் என்ற உணர்வும் தமிழ்ப்பற்றும் மொழியினிடத்திலே உள்ள ஆர்வமும் மிகுதியாக இருப்பதை நாம் காண முடியும். வடக்கேகூட டில்லியிலே வாழ்கிற தமிழர்கள் கல்கத்தாவிலே வாழ்கிற தமிழர்கள் பம்பாயிலே வாழ்கிற தமிழர்கள் கொண்டிருக்கிற அந்தத் தமிழ் ஆர்வத்தை நாம் பெற்றிருக்கவில்லை. ஏன் பெற்றிருக்கவில்லை என்பதற்கு இயற்கையான ஒரு காரணம் உண்டு. நாம் இடம் பெயர்ந்தவர்கள் அல்ல.

எனவே, நம்முடைய இடத்திலே நாம் வாழ்கிற காரணத்தால் நம்முடைய அருமை நமக்குத் தெரியாது. தாய் தந்தையை விட்டுப் பிரிந்து வேறு இடத்தில் வாழாத பிள்ளைக்குப் பெற்றோருடைய அருமை தெரியாது. படிப்பதற்காகத் தொலை தூரத்திற்குப் படிக்கவேண்டிய நிலைமை ஏற்படாதவனுக்குப் பள்ளிக்கூடத்தின் அருமை கூடத் தெரியாது. ஆசிரியர்களைத் தேடிச் சென்று அடையாதவனுக்கு, ஆசிரியருடைய அறிவாற்றல் கூட புலனாகாது. ஏட்டினைத் தேடிப் படிக்காதவனுக்கு ஏட்டிலே உள்ள கருத்தின் அருமை கூடப் புரியாது. எனவே எளிதாகக் கிடைத்துவிடுகிற காரணத்தால் நாம் அவற்றின் அருமையை உணராதவர்களாக ஆகிவிடுகிறோம். நாம் உணராதவர்களாக ஆவதைப்போல வேறுபல நாட்டிலே உள்ளவர்களும் அப்படித் தானே ஆகியிருப்பார்கள். நாம் மட்டும் அப்படி

ஆகியிருக்கிறோமா என்று எண்ணிப் பார்த்தால் அதற்கு ஒரு காரணம் உண்டு. நாம் மட்டும்தான் அப்படி ஆகிறோம். மற்றவர்கள் அப்படி ஆகவில்லை.

**தொன்மையான மொழி தமிழ் என்பதே காரணம்:**

வங்கத்திலே வாழ்கிற மக்களுக்கு வங்க மொழி உணர்ச்சி மிகுதி என்பதை இங்கே எடுத்துக் காட்டினார்கள். மராட்டியனுக்குக் கூட மராட்டி மொழியினிடத்திலே உள்ள பற்று மிக அதிகம். கருநாடக மாநிலத்திலே இருக்கிறவர்களுக்குக் கூட கன்னடமொழியிலே இருக்கிற பற்று, நம்முடைய தமிழ்ப் பற்றைவிட குறைவு உடையதல்ல. ஆந்திரத் தோழர்களுக்குத் தெலுங்கிலே இருக்கிற பற்று குறைவானது அல்ல, காரணம் அவர்கள் மொழி அண்மைக் காலத்திலே பிறந்து வளர்ந்த காரணத்தால், வளருகிற கட்டத்திலே இருக்கிற காரணத்தால் அந்த மொழி உணர்வு அவர்களைத் தங்கள் மொழியை வளர்க்கவேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு வகையிலே உறவு கொண்டாட வைத்து விடுகிறது. நம்முடைய தமிழ் மிகத் தொன்மையான மொழியாகப் போன காரணத்தால் அத்தகைய உணர்வு நம்மிடையே இன்று இல்லை. கிழவி என்ற சொல்லுக்குத் தலைவி என்ற ஒரு பொருளுமுண்டு. (சிரிப்பு) பொருள்தான் தலைவியே தவிர உண்மையிலேயே கிழவியாக இருந்தால் கிழவியாக இருக்கிற காரணத்தால்—அது பாட்டியாக இருந்தாலும் சரி—தாயாக இருந்தாலும் சரி—அவர்களைப் பற்றிய நினைவு நமக்கு எவ்வளவு இருந்தாலும்கூட அது சிறப்புற்று ஓங்குவதில்லை.

நம்முடைய கவிஞர் மணிவேந்தன் அவர்கள்கூட காதலியைப் பற்றித்தான் பாடியிருக்கிறாரே தவிர அன்னையைப் பற்றிப் பாடிய இடத்தை நான் பார்க்கவில்லை. (சிரிப்பு) காரணம் கவிஞர்கள் இளமை உணர்

வோடு கலந்தவர்கள். அவர்களுக்குக் காதலியைப் பாடுகிறபோது பாட்டு எளிதாக வரும். தாயைப் பாடுகிறபோது சற்றுப் பின்னாலேதான் போகும். (சிரிப்பு) பாட்டியைப் பாடுவதாக இருந்தால் இன்னும் சற்றுக் கடினமாகக் கூட இருக்கும். (சிரிப்பு) நான் பாட்டி என்ற அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். நீங்கள் முன்னாலே எதையும் சேர்க்க உங்களுக்கு உரிமை இல்லை. (பெருஞ்சிரிப்பு) அதைப்போல தமிழ்மொழி உலகத்திலே தோன்றிய மொழிகளிலே எல்லாம் தொன்மை வாய்ந்த மொழி. இங்கே நம்முடைய டாக்டர் நாகு எடுத்துச் சொன்னதைப் போல 'கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு' என்று புரட்சிக் கவிஞர் பாடியபோதுதான் தமிழை உயிராக மதிக்கும் எண்ணம் தோன்றுகிறது.

## மொழிகளுக்கெல்லாம் தாய், தமிழே!

தமிழ்மொழி ஞாலத்திலேயே தொன்மையாகப் பிறந்த தாய்மொழியாகவே பிறந்த மொழி. மொழிகளுக்கெல்லாம் தாய். பாவாணர் அவர்களும் அப்படிப்பட்ட ஆராய்ச்சிக் கருத்துகளை எடுத்துத் தெரிவிக்கிறார்கள். மொழிகள் அனைத்துக்கும் நேரடியாகத் தாயாக இல்லை என்று சொன்னாலும் வேறு எந்த ஒரு மொழியின் தாய்மொழி என்று குறிப்பிடத்தக்க வாய்ப்பு உலகத்திலே வேறு எந்த மொழிக்கும் இல்லை, தமிழ் தவிர. வேண்டுமானால் தாயாக இருக்கலாம். சிற்றன்னையாக இருக்கலாம். அல்லது பாட்டியாக இருக்கலாம். அல்லது மூத்த சகோதரி என்று உறவு கொண்டாட வேண்டிய நிலைமை இருக்கலாம். ஆனால் தமிழுக்கு முன்னதாக இன்னொரு மொழி இருந்தது என்று காட்டுவதற்கோ அல்லது எங்களுக்குத் தமிழ்மொழி அல்ல, இன்னொரு மொழிதான் உண்மையிலேயே தாய்மொழி என்று காட்டுவதற்கோ இன்னொரு மொழி உலகத்தில் இன்றைய தினம் இல்லை. வேண்டுமானால் தொடர்

புடைய மொழியாகக் காட்டத்தக்க வாய்ப்புடையவை உண்டு. குடும்ப மொழிகள் என்ற வகையிலே உள்ள மொழிகள் உண்டு. அவற்றுக்கெல்லாம் மூலமொழி என்று சொல்லத்தக்க வேர்ச்சொற்களுடைய அடிகளைப் பெற்றிருக்கிற ஒரு மொழி, தமிழ்தான்.

### தமிழனுக்கு ஒரு தனி இடம்

உலகத்திலேயே முதல் மனிதன் தோன்றினான் என்று சொல்கிறபோதும் தமிழனுக்கு ஓர் இடம்—நெருக்கமான இடம் உண்டு. முதல் நாகரிகம் பிறந்த இடம் என்று சொல்கிறபோதும் அதனோடு நெருக்கமான இடம் தமிழனுக்கு உண்டு. முதல் அரசு பிறந்த பகுதி என்று சொல்கிற போதும் அதனோடு நெருக்கமான தொடர்பு தமிழனுக்கு உண்டு. முதல் இலக்கியம் அல்லது இலக்கியக் கருத்துகளுக்கான பாடல்கள் பிறந்த பகுதி என்று சொல்கிறபோதும், தமிழுக்கு அந்த நெருக்கமான தொடர்பு உண்டு. எனவே இந்தத் தொடர்பெல்லாம் சேர்த்து எண்ணுகிறபோது மிகத் தொன்மையான ஒரு மொழி, அது எப்போது தொல்காப்பியம் பிறந்தது என்பது வேறு. தொல்காப்பியம் பிறந்ததற்குக் காரண மாக இருந்த இலக்கியங்கள் பிறந்தது எப்போது என்பது வேறு. அந்த இலக்கியங்கள் இலக்கிய வடிவம் பெறு வதற்கு முன்னாலே சொல்லும் பொருளுமாகக் கருத்துக்கள் வழங்கத்தக்க நிலையிலே மொழி வளர்ந்தது எவ்வளவு ஆண்டு காலம், எத்தனை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் என்பது வேறு.

### இலெமூரியாவில் வாழ்ந்த முதல் மனித இனமே, தமிழினம்தான்

மனிதன் பிறந்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது மனிதன் பிறந்து ஏறத்தாழ — மனித உயிர் பிறந்து ஏறத்தாழ — முப்பது லட்சம் ஆண்டுகள்தான் ஆகி

யிருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். முப்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்னாலே மூன்று கோடி ஆண்டுகள் வரையில் பல்வேறு உயிரினங்கள்தான் படிப் படியாக வளர்ந்திருந்தன. முப்பது லட்சம் ஆண்டு களுக்கு முன்னாலே மனிதன் பிறந்திருக்கக்கூடும். மனிதன் என்று சொல்லத்தக்க இலக்கணத்தோடு பிறந்தவன் பிறந்து மூன்று லட்சம் ஆண்டுகள்தான் ஆகியிருக்கக் கூடும். அந்த மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன்னாலே பிறந்த மனிதன் பிறந்த இலமூரியாவோடு — குமரிக் கண்டத்தோடு — அவன் ஏறத்தாழ இன்றைய தமிழகத் தினுடைய தெற்குப் பகுதியாக இருக்கிற கடற்பகுதி நிலப்பகுதியாக இருந்த காலத்திலே பிறந்த மனிதனோடு நெருக்கமான தொடர்பு கொண்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவன் தமிழன் என்பதில் யாருக்கும் மாறுபாடு ஏற்பட முடியாது.

### தமிழை இயல்பான தாய்மொழியாகப் பெற்றவனே தமிழன்

தமிழன் என்றால் நீயா நானா என்பதல்ல. தமிழ் மொழியை இயல்பாகத் தாய்மொழியாகப் பெற்றவ னெல்லாம் தமிழன் என்ற இலக்கணத்தோடுதான் நான் சொல்லுகிறேன். நான் ஒரு வேளை வடக்கே எங்கே யாவது பிறந்து இங்கே வந்திருக்கலாம். நான் வந்தேனா இல்லையா என்ற வரலாறு எனக்குத் தெரியாது. நானா நீயா யார் என்பது கேள்வியல்ல. யார் தமிழ்மொழியை இயல்பாகத் தாய்மொழியாகப் பெற்றிருக்கிறானோ. இன் னொரு மொழி, தாய்மொழி என்று எண்ணுவதற்கு இடமற்றவனாக இருக்கிறானோ அப்படிப்பட்ட தமிழன் எல்லாம் அந்தத் தொன்மையோடு தொடர்புடையவன்.

### தமிழை அழிக்க எவனாலும் முடியாது

அந்தத் தொன்மைத் தொடர்பு — மொழித் தொடர்பு — நாகரிகத் தொடர்பு அத்தனையும் நமக்கு

இயல்பான — உரமாக அமைந்துவிட்ட காரணத்தால் அவற்றைப் போற்றி வளர்க்கவேண்டும் என்ற ஓர் உணர்வுக்கு நாம் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படவே இல்லை. அவற்றுக்கு இழுக்கு ஏற்படுகிறது என்று எண்ணுகிறபோதுகூட அந்த மொழி அழிந்துவிடும் என்ற கவலை நமக்குப் பிறந்ததில்லை. மொழிக்குச் சிதைவு ஏற்பட்டபோதுகூட நம்முடைய மொழி அழியாது என்ற எண்ணம் ஏற்படுகிற அளவுக்கு வலுவான சான்றுகள் நம் பக்கம் இருக்கின்றன. இடையிலே வருகிற அண்மைக் காலத்துப் புதுக்கவிதைகளோ அல்லது கலப்பட நடையாக உருவாக்கப்பட்ட மணிப்பிரவாள நடையோ அல்லது மணிப்பவள நடையோ அல்லது அண்மைக்காலத்து ஏடுகளில் இடம் பெறுகிற பிறமொழிக் கலப்பு நடைகளோ, அல்லது ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுது கின்ற நடைகளோ தமிழை அழிக்காது என்பதிலே எனக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஏன் தமிழை அழிக்காது என்றால் நாம் ஒன்றும் தமிழைக் காப்பாற்ற வில்லை. எனவே எவனும் தமிழை அழிக்க முடியாது. (கைதட்டல்)

தமிழராகப் பிறந்த மக்களிடத்திலே மிச்சமிருக்கிற தமிழ், வேறு எந்த ஒரு மொழியையும் வெல்லுகின்ற ஆற்றல் உடையது. ஆகவே நம்மிடத்திலே இயல்பான ஆற்றல் இருக்கிறது. ஒரு தன்னம்பிக்கை இருக்கிறது. அதனாலே நமக்கு வருகிற குறைபாடுகள், நமக்கு ஏற்படுகிற கேடுகள், நம்முடைய மொழிக்கு இழைக்கப் படுகிற அநீதிகள் இவற்றை உணர்வதற்கு அதற்காக ஆத்திரப்படுவதற்கு நமக்கு இயல்பாக ஒரு சூழ்நிலை இல்லை. இருந்தாலும் நான் நினைவூட்ட விரும்பு கிறேன். அந்தச் சூழ்நிலையைத் தமிழ்நாட்டிலே இருக்கிறபோது நாம் பெற முடியாததற்கு இவை யெல்லாம் காரணம்.

## தமிழ்ச் சமுதாயம் 'இழப்புக்கு' ஆளாகி விட்டது

ஆனால் வெளிநாடுகளுக்குச் செல்கிற போது வேறு இடத்திலே சென்று வாழ்கிற போது பிற மக்களிடத்திலே அவர்களுடைய மொழி உணர்வு எப்படி இடம் பெற்றிருக் கிறது என்பதைக் காணுகிறபோது நம்முடைய மொழி உணர்வு தூண்டப்படுகிறது. மற்றவர்களுடைய நாகரிகத்தை அவர்களுடைய பழக்கவழக்கத்தைக் காணுகிறபோது நம்முடைய பழக்கவழக்கத்தைப் பற்றிய எண்ணம் நம்முடைய உள்ளத்திலே ஊறுகிறது. மற்றவர்கள் தங்களுடைய இனத்தின் பெருமையைப் பேசுகிறபோது நம்முடைய இனத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கிறோம். அது நிலைத்து நின்று நம் உள்ளத்தில் வளர்ந்தால்தான் எதிர்காலத்திலே தமிழ்ச் சமுதாயம் தலைநிமிர்ந்து வாழ முடியும்.

தமிழ்ச் சமுதாயம் தலை குனிவுக்கு ஆளாகி விட்டது என்று நான் எண்ணவில்லை. ஆனால் இழப்புக்கு ஆளாகி விட்டது. அதை நாம் மறந்துவிட முடியாது. அந்த இழப்புக்குக் காரணம் தங்களையே உணராத நிலைமைக்குத் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டிருந்தார்கள். தங்களை உணரக் கூடிய நிலைமை வருகிறபோது அது இடை இடையிலே வெவ்வேறு காரணங்களினாலே, அந்த உணரக் கூடிய வாய்ப்புத் தடுக்கப்படுகிறது. அது தானாகத் தடைப்பட்டு விடுகிறது. அந்த உணர்வு தொடர்ந்து வளர வேண்டும்.

## அரசியல் வாதிகளைவிட, கவிஞர்களுக்குப் பொறுப்புமிகுதி

அந்தக் கடமையைச் செய்யக் கூடிய ஆற்றல் அரசியல் வாதிகளைவிட எழுத்தாளர்களுக்கு அதிகம். எழுத்தாளர் களைவிட கவிஞர்களுக்கு இன்னும் மிகுதி. அந்தப் பொறுப்புங் கூட கவிஞர்களுக்குத்தான் மிகுதி என்பது

என்னுடைய எண்ணம். ஏனென்றால் இங்கே பேசிய நம்முடைய அருமை நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல கருத்துக்களை மிக அழகான வடிவத்தில் தருவது மட்டுமல்ல; ஆழமாக உள்ளத்தில் பதியவைக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றவன் கவிஞன்.

கவிஞனுக்கும் ஒரு பேச்சாளனுக்கும் எழுத் தாளனுக்கும் இடையே உள்ள வேறுபாடு, பேச்சாளர்கள் கேட்கின்ற போது சிந்திக்க வைப்பவர்கள். எழுத்தாளர் கள் படித்து, மறுபடியும் சிந்திக்கத் தூண்டுபவர்கள். நல்ல கவிஞர்கள், படித்து அதனை மறக்காமல் தங்கள் நினைவிலே வைத்துக் கொள்ளச் செய்பவர்கள்.

எனவே கவிஞர்களுடைய ஆற்றல் அதிகம். கவிதைக்கு அந்த ஆற்றல். ஏனென்றால் பேசுகிறவன் எண்ணுவதைப் பேசுகிறான். சில பேர் எண்ணாமலே பேசுகிறார்கள். அதுவேறு. (சிரிப்பு) எழுத்தாளன் எண்ணியதை ஒழுங்கு படுத்தி அதற்குப் பின்னாலே எழுதுகிறான். முறைப் படுத்தி ஒழுங்குபடுத்தி வகைப்படுத்தி எழுதுகிறான். கவிஞன் எண்ணுவதை எண்ணிப் பார்த்தே எழுத முடியாது — எண்ணுவதை எழுதுகிறவன் கவிஞன் அல்ல. எண்ணுகிறவன் எண்ணியதை உணருகிறான். உணருகிற போது அவனுடைய உள்ளம் அவனோடு கலந்து குழைகிறது. உணர்ச்சி வடிவு பெறுகிறது. அந்த உணர்ச்சியை அதற்குப் பின்னாலே கொட்டுகிறான். கொட்டுகிறபோது கவிதை வடிவிலே வருகிறது.

## உணர்ச்சிப் பிழம்பே கவிதையாகிறது

''ஏடா தம்பி! எடடா பேனா'' என்று புரட்சிக் கவிஞர் தன்னுடைய மகனை அழைத்துப் பேனா எடுத்து வரச் சொல்லி 'ஏடா தம்பி, எடடா பேனா' என்று அழைத்துக் கவிதை எழுதுவார் என்று அறிஞர் அண்ணா அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே

முப்பதாண்டுகளுக்கு முன்னாலே எழுதிய கட்டுரைக்கு அதைத் தலைப்பாகக் கொடுத்துப் புரட்சிக் கவிஞரைப் பற்றி எழுதினார்.

அந்த 'ஏடாதம்பி எடடா பேனா' என்று சொல்கிற போதே கவிஞருடைய உள்ளம், பேனா எங்கிருக்கிறது தாள் எங்கிருக்கிறது எடுத்து வருகிறவன் யார் எதிரே மேசை இருக்கிறதா விளக்குஎரிகிறதா உண்டு விட்டோமா என்று இந்த நிலைகளிலே கவிஞர் எழுதுவதில்லை. அந்த நிலைகளிலே எழுதுகிறார்கள். அவர்கள் கவிஞர்கள் அல்ல. இன்னதை உண்டால் எழுத முடியும் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள் (சிரிப்பு) அவர்கள் உண்டதை வெளிப்படுத்துகிறார்கள். அதுவே தவிர அது கவிதைதானா என்பது எனக்குத் தெரியாது. கவிதையாகவும் இருக்கலாம். அதிலே கவிதை நயம் இல்லை என்பது என்னுடைய கருத்தல்ல. அது கவிதை யாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

கீழே விழுந்து கிடக்கிற பொருள்கூட மிகச் சிறந்த ஒரு நல்ல பொருளாகப் புழுதியிலே கிடக்கலாம். அதை எடுத்துப் பார்க்கிறவன் அதைப் போற்றிக் காப்பாற்றிக் கொள்ளலாம். அதைப் போலக் கவிதை பிறக்கிறபோது, கவிதை என்பது எழுத்து எழுத்தாக, சொற்கள் சொற் களாக வடிவெடுப்பதல்ல. உணர்ச்சிப் பிழம்பு கவிதை யாகிறது. அந்த உணர்ச்சிக்கனல் ஒரு கவிஞனுடைய உள்ளத்திலே தோன்றுகிறபோது அவன் அதை வெளிப் படுத்தி விடுவானேயானால் அது கவிதையாக மலரும். அது சிறப்பாக இல்லாவிட்டால் வெளிப்படுத்தியவன் அதற்குப் பொறுப்பு. அது சிறப்பாக அமைந்து விடுமானால் அது நாட்டுக்குத் தரப்படுகிற செல்வம்.

## இயற்கை உணர்வோடு பிறப்பவன் கவிஞன்

அந்தச் சிறந்த கவிஞன் இயற்கையிலே பிறப்பவன். சிறந்த கவிஞன் உருவாகான் என்பதை நான் ஏற்றுக்

கொள்வதில்லை. அவன் உருவாகிறான் என்றால் அவனுடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு காலக் கட்டத்திலே அவன் எழுதத் தொடங்கி எழுதிப் பார்த்து ஒரு முறை இருமுறை எழுதிப் பார்த்து சில வரிகள் கவிதை நலமோடு அமைந்து சில வரிகள் அமையாமல் போய் அவன் தட்டுத் தடுமாறி பின்னரும் எழுதத் தொடங்கித் தொடர்ந்து எழுதி எழுதி அவன் சிறந்த கவிஞன் ஆகியிருக்கலாம்.

ஆனால் ஓர் எழுத்தாளன், எழுத்தாளனாக ஆவதைப் போலக் கவிஞன் கவிஞனாவதில்லை. கவிஞரிடத்திலே அந்த இயற்கை உணர்வு மற்றவர்களைவிட மிக ஆழ்ந்த உணர்வாக எண்ணுவதை வெளிப்படுத்துகின்ற ஒரு பேராற்றலாக மாற்றம் பெறுகிறது. குழந்தையினிடத்திலே கொஞ்சுகிறவன் எப்படிக் கொஞ்ச வேண்டும் என்று சொல்லித் தந்து கொஞ்சுகிறவன் கொஞ்சமாட்டான். எனக்குக் குழந்தைகளிடத்திலே கொஞ்சத் தெரியாது. எனக்குப் பேரன் பேத்திகள் இருக்கிறார்கள். கொஞ்ச வராது. ஏனென்றால் குழந்தைகளிடத்திலே கொஞ்சுவது என்பது என்னுடைய உள்ளத்திலே பட்டாலும் கூட நான் கொஞ்சி மகிழ்கிற அந்த உணர்வுக்கு என்னை அதிக நேரம் ஈடுபடுத்திக் கொள்ள முடியாதவனாகவே என்னுடைய குறை அமைந்து விட்டது.

ஆனால் குழந்தைகளிடத்திலே கொஞ்சுவதற்கு ஒரு தாய்க்குப் பயிற்சியும் பள்ளிக்கூடமுமா தேவை? காதலன் காதலியிடத்திலே கொஞ்சுவதற்குப் பயிற்சி தேவை யில்லை. மிஞ்சுகிறபோது தடுப்பதற்குத்தான் பயிற்சி தேவையே தவிர (பெருஞ்சிரிப்பு) கொஞ்சுவதற்குத் தேவையில்லை. ஏனென்றால் உணர்வு அடிப்படையிலே தோன்றுகிற அந்தநிலை தெரியும். அதற்கு வடிவம் இன்னது என்பது வரையறுக்கப்பட்டதாக நம்முடைய பேராசிரியர்கள் பலபேர் எடுத்துச் சொன்னாலும் கூட,

நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த உணர்ச்சி தெளிந்த உணர்வாக இருக்குமானால் அது தானே ஒரு வடிவத்தைப் பெறும். அந்த உணர்ச்சி தெளிந்த வடிவாக இல்லாதபோது அந்த வடிவம் செப்பனிடப்பட வேண்டிய ஒன்றாக ஆகும்.

## தெளிந்த உணர்வோடு வெளிவருவதே சிறந்த கவிதை

தேசிய கவி பாரதியாருக்கோ அல்லது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கோ அவர்கள் பாடிய பாடல்கள் எல்லாம் சீர் செய்து சீர்செய்து செப்பனிடப்பட்ட பாடல்கள் அல்ல. ஆனால் அவர்களே உயர்ந்த உணர்வோடு கவிதைக்கனலாக வெளிப்படுத்திய பாடல்கள் எப்படி அமைந்திருக்கின்றனவோ அதைப்போல அவர்களே வேறு நிலைகளிலே அந்த நிலைக்கு ஆளாகாமல் அந்த உணர்ச்சி கொந்தளிக்காமல் ஏதோ ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறபோது அந்தக்கவிதை உயர்ச்சி அந்த அளவு இல்லை என்பதை அவர்களுடைய கவிதைகளைப் படிக்கின்ற யாரும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு நீண்ட நெடுங்கவிதை எழுதத் தொடங்குகிறபோது, கம்பனைப்போல் ஒரு சிறந்த நடையிலே தொடர்ந்து எழுதுகிற ஆற்றல் பலருக்கு வாய்ப்பதில்லை. இளங்கோவடிகளைப் போல் இடையீடு இல்லாமல் தொடர்ந்து எழுதுகிற திறன் பலருக்கு உருவாவதில்லை. சீவகசிந்தாமணியைப் போல்—திருத்தக்க தேவர் இயற்றியதைப் போல்—நடை நலத்தோடு இயற்றுகிற ஓர் ஆற்றல் அனைவருக்கும் வாய்ப்பதில்லை. கவிஞருடைய உடை நலம்தான் நடைநலம்.

## சொற்கள், கவிஞனின் ஏவலைக் கேட்கும்; ஆணைக்குக் கட்டுப்படும்

அந்த உடைநலம் என்று நான் சொல்வதற்குக் காரணம் நம் உள்ளத்து உணர்ச்சியினால் அதனுடைய

கரு, அதனுடைய உயிர் அந்த உணர்வு கலந்து நிற்கிற நிலையிலே அவன் நினைவாற்றல் மிக்கவனாக இருப்பானேயானால் சொல்வளம் நிரம்பப் பாடக்கூடிய ஆற்றல் பெற்றவனாக இருப்பானேயானால், தானே அந்தச் சொற்கள் அவன் அழைக்காமலே வந்து நிற்கும். அவன் ஏவலைக் கேட்கும், அவன் ஆணைக்குக் கட்டுப் படும். அவன் சொல்வதற்கு மிஞ்சி இன்னொரு சொல் அந்த இடத்திலே வந்து நிற்பதற்கு ஏற்ற சொல் கிடைக்காது. எனவே மிகச் சிறந்த செஞ்சொற் கவி இன்பம் பெறவேண்டும் என்று விரும்புகிறவர்கள் அந்தக் கவிதையிலே ஒரு சொல்லை எடுத்துவிட்டு இன்னொரு சொல்லைப் பெய்தால் அது அந்தக் கவிதையிலே இடம் பெற முடியாது. அந்த ஆற்றலோடு மிகச் சிறந்த கவிஞர் களாக வளருவதற்கான கரு நம்முடைய இளங்கவிஞர் களிடத்திலே இருக்கிறபோது நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

நான் இப்போது மு. பி. பாலசுப்பிரமணியன் அவர் களைப் பற்றிச் சொல்ல விரும்புவதெல்லாம் அவருடைய உள்ளத்திலே கவிதைக்கரு இருக்கிறது. அதற்குத் தேவை யான உணர்வு இருக்கிறது. அதை வடித்துத் தருகிற சொல் ஆற்றல் இருக்கிறது. இவை அனைத்துக்கும் தேவையான கொள்கை இருக்கிறது. ஏன் இப்போது நான் கொள்கைக்கு வருகிறேன் என்றால் டாக்டர் நாகு அவர்கள் பேசியபோது நான் கவனித்ததில் அவருடைய கொள்கைகளிலேதான் சிலவற்றிலே எங்கேயாவது மாறு பாடு வருமே தவிர, மாறுபாடு என்றோ அல்லது அதைப் பற்றி ஆராய்கின்றவன் என்ற முறையில் அதை ஏற்க லாமா? கூடாதா? என்ற நினைவுகள் வருமே தவிர அவருடைய நடை மிகச் சிறந்தது என்று சொன்னார்கள்.

## கவிஞனுக்குக் கொள்கை தேவை

நான் கொள்கை இல்லாமல்—கொள்கை, வேறுபட்ட கொள்கை இருக்கலாம், நான் குறிப்பிடுவது என்னுடைய கொள்கையைச் சொல்லுகிறவன் கவிஞன் பிறருடைய கொள்கையைச் சொல்லுகிறவன் கவிஞன் அல்ல என்று நான் கருதுகிறவன் அல்ல. ஆனால் கவிஞருக்குக் கொள்கை தேவை. கொள்கை என்பது ஓர் இயக்கத்தின் கொள்கை என்றோ கட்சியினுடைய கொள்கை என்றோ ஒரு தலைவர் சொன்ன அந்தக் கொள்கை மட்டும் என்றோ நான் குறிப்பிட விரும்பவில்லை.

கொள்கை என்பது கவிஞனுக்குக் குறிக்கோளாக அமைகிறபோதுதான் பாடுவதற்கான மூலமே கிடைக்கும். கொள்கை குறிக்கோள் இல்லாதபோது பாடுவதற்கு மூலம் கிடைக்காது. பாடுவதற்கு அடிப்படை கிடைகாது. அந்தக் கொள்கையோடு மற்றவர்கள் மாறுபட லாம்; உடன்படலாம். அது அவரவர் விருப்பம். கொள்கை என்பது கருத்தாக ஆகிவிடுகிற காரணத்தால் மாறுபடுகிற உரிமை உண்டு.

## எண்ணத்தால் சுதந்திரம் உள்ளவனே கவிஞன்

கவிஞனே சிறப்படைவது அவன் சுதந்திரக் கவிஞனாக இருக்கிற போதுதான், சுதந்திரத்தைப் பாடுகின்ற கவிஞன் அல்ல—எண்ணத்தாலேயே சுதந்திரம் உள்ள வனாக இருக்கிறபோதுதான் கவிஞன் பிறக்கின்றான். எண்ணத்திற்கான கட்டுப்பாடுகள் எத்தனையோ உண்டு. நாம் அறிந்த கட்டுப்பாடுகள் அறியாத கட்டுப்பாடுகள் நம்மைச் சூழ்ந்திருக்கின்ற கட்டுப்பாடுகள் நம்முடைய எண்ணத்திற்கு அமைந்திருக்கின்ற வேலிகள் இவைகள் ஏராளம்.

எனவே அப்படி அமைந்திருக்கிறபோது ஒரு மனிதன் சுதந்திரமாகச் சிந்திக்கிறவன்தான் முழுச் சிந்தனையாள

னாக ஆகமுடிவதைப் போல், ஒரு கவிஞன் சுதந்திரமாக எண்ணுகிறபோதுதான் முழு அளவு கருத்துகளை வெளியிடுகிற உரிமை பெற்றவனாகத் தானே உணர்ந்து செயல்படுத்துவான். ஆனால் அப்படி முழுச்சுதந்திரம் இருக்கிறபோது அதிலே ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும்: கொள்கை இருக்கவேண்டும்.

## நினைத்ததையெல்லாம் பாடுபவன் கவிஞன் அல்லன்

சுதந்திரம் இருக்கிறது என்ற காரணத்தால் அவன் நினைத்ததை எல்லாம் பாடுகிறபோது அவனுடைய பாடலைப் படிக்கிறவர்களுக்கு அவனை வைத்து ஓர் எண்ணத் தெளிவு ஏற்படாது. கள் குடிப்பதையும் போற்றிப்பாடி, மது விலக்கையும் போற்றிப் பாடினால்—(சிரிப்பு) பயன் இருக்காது. கவிஞர்கள் இரண்டு நிலையிலேயும் இருக்கலாம்; அதை நான் ஏற்றுக் கொள்வேன்—ஆனால் இரண்டையும் பாடுகின்றபோது படிப்பவனுக்கு அதிலே இருந்து பயனாகிய ஓர் உணர்வு கிடைக்காது.

தமிழைப் போற்றியும் பாடி, பிறமொழிக் கலப்பை ஏற்றும் பாடுவானேயானால் சிறப்பு ஏற்படாது. தமிழ் இனத்தைப் போற்றியும் பாடி அதே நேரத்தில் தமிழ் இனம் அழிவதற்குக் காரணமாக இருந்த கருத்துக்களையும் வரவேற்றுப் பாடுவானேயானால் அப்போது அது சிறப்படையாது. எனவே நான் கொள்கை என்று சொல்வது ஒரு கட்சியினுடைய கட்டுதிட்டமல்ல. ஏனென்றால், கவிஞனே சுதந்திரமாக இருக்கவேண்டும். அவனே இயற்கையிலேயே விடுதலை உணர்வு பெற்றவனாக இருக்க வேண்டும்.

## எண்ண ஓட்டம் எல்லையற்றதாக இருக்கவேண்டும்

அப்போதுதான் கவிஞனின் கவிதைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய வளாகம்—சுற்றளவு கிடைக்கும்.

ஓர் அறைக்குள்ளே அமர்ந்திருக்கின்ற கவிஞனுடைய கண்ணோட்டம் கூட மிக நீண்ட தொலைவில் செல்வது இல்லை. கடற்கரையில் உலாவுகிற கவிஞனுடைய உள்ளமோ விரிந்து பரவுகிறது. வான்காட்சியைக் காணு கிற கவிஞனுக்கு உள்ளம் தெளிவடைகிறது என்று கவிஞருடைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளை நாம் பார்த்து இருக்கிறோம்.

எனவே அந்த எண்ண ஓட்டம் விரிவாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அது எல்லையற்றதாகச் சொல்வதற்கான வாய்ப்புப் பெற்றதாக இருக்க வேண்டும். அந்த எண்ண ஓட்டம் எல்லையற்றதாக இருக்க வேண்டுமே தவிர ஒவ்வொன்றிலேயும் குறிக்கோள் இருக்க வேண்டும். நான் எதற்குக் கவிதை பாடுகிறேன் — அந்த எண்ணம் இருக்கவேண்டும்.

## பாரதியும் பாரதிதாசனும்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கும் தேசியக்கவி பாரதியாருக்கும் இருக்கிற வேறுபாடு என்ன என்று நீங்கள் எண்ணிப் பார்த்தால் அந்த உண்மை விளங்கும். தேசியக் கவி பாரதியார் வாழ்ந்த காலம் தந்தை பெரியாருடைய தன்மான இயக்கம் பிறக்காத காலம். சுயமரியாதைக் கருத்து என்று ஓர் அடைமொழி யோடு கருத்துக்களைச் சொல்லத் தொடங்காத காலம். தமிழன் என்று ஓர் இனத்தைப் பற்றித் தனியாகப் பிரித்துப் பேசவேண்டிய நிலைமை இல்லாத காலம். பொதுநோக்கிலே நாடு முழுவதும் எண்ணிப் பார்த்துப் பாடவேண்டிய சூழ்நிலை.

அப்போதே அவன் தமிழனைப் பற்றிப் பெருமை யாகப் பாடினான். தமிழ் மொழியை உயர்த்திப் பாடினான். தமிழ் மொழியை அவன் உயர்த்திப் பாடியதைப்போல் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்.''

''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை'' என்று பாடுகிறபோது அவருடைய நோக்கு இது அல்ல. தமிழைப் போற்றுவது அவருடைய நோக்கம் அல்ல. தமிழ் அவனை ஆட்கொண்ட காரணத் தால் போற்றிப் பாடினான். அவனுக்கு அது குறிக்கோள் அல்ல. இதைத்தான் பாடவேண்டும் என்று எண்ணி யவன் அல்ல. அவன் தமிழால் ஆட்கொள்ளப்பட்டான், அந்த உணர்வு அவனிடமிருந்து பீறிட்டு வெளிப்பட்ட போது — திருக்குறளைப் படித்த காரணத்தால், சிலப்பதி காரம் விளங்கிய காரணத்தால், கம்பரை அவர் கண்ட காரணத்தால், அவருடைய உள்ளம் அப்படி வியந்து பாடியது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் அதே தமிழ் உணர்வு பெற்றவர்தான், அந்த வகையில். ஆனால் அவர் தமிழுக்காகப் பாடவேண்டும் என்று எண்ண வேண்டிய நிலைமைக்கு ஆளானவர். தமிழனுக்காகப் பாடவேண்டும் என்ற சூழ்நிலைக்கு ஆளானவர். தமிழ் இனத்தைப் போற்றிப் பாடவேண்டும் என்ற எண்ணத் திற்கு ஆளானவர். அந்தத் தமிழ் இனத்திற்குக் கேடு பயக்கின்ற கருத்துகளை எல்லாம் சுட்டிக்காட்ட வேண்டும்; தமிழ் இனப் பகையைச் சுட்டிக்காட்ட வேண்டும். அப்போதுதான் தமிழன் தலைநிமிர்வான் என்ற எண்ண ஒட்டத்திற்கு ஆளானபோது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புதிய வடிவம் எடுத்தார்.

பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இடையே கருத்திலே அதிக வேற்றுமை இல்லை. இரண்டு பேரும் கவிதைக் கரு கொண்டவர்கள். இரண்டு பேர் உள்ளத் திலேயும் தமிழ் கொழித்து வளர்ந்தது. இரண்டு பேருமே சிந்தனையிலே பேரளவுக்கு சுதந்திர சிந்தனை படைத் தவர்கள். இரண்டு பேரும் துணிச்சல் உடையவர்கள்.

பாரதியாருடைய மறுவடிவம் பாரதிசாசன் என்று சொன்னால்கூட எனக்கு அதிலே வருத்தம் இல்லை. வேறுசில கருத்து அடிப்படையிலே பாரதியார் வேறு; பாரதிதாசன் வேறு என்று சொல்கிறவர்கள் உண்டு என்று சொன்னாலும் பாரதியார் வாழ்ந்தபோது பாரதிதாசன் வாழ்ந்து முப்பத்து ஒன்பது வயதோடு முடிந்திருப்பாரேயானால் அவர் பாட்டும் அங்கேதான் நின்றிருக்கும்.

பாரதியார் வாழ்ந்தது 1921 ஆவது ஆண்டு வரையிலே தான். நான் பிறப்பதற்கு முன்னாலே மறைந்த பெரியவர் அவர். அவர் வாழ்ந்ததே முப்பத்தொன்பது ஆண்டுகள்தான். அவர் எழுதிய கவிதைகள், ஐம்பது ஆண்டு எழுதவேண்டிய கவிதைகள். அவர் எழுதிய எண்ணங்களுடைய ஓட்டத்தை நீங்கள் பார்ப்பீர்களே யானால் அந்த எண்ண ஓட்டம் அப்படியே தொடர்ந்து வளருமானால் அது பாரதிதாசனாக — வாணிதாச னாக — இன்றைக்கு இருக்கிற உவமைக் கவிஞர் சுரதா வாக, இன்னும் இங்கே வீற்றிருக்கிற மற்றக் கவிதைத் துறையிலே வல்லுநர்களாக விளங்குகிற நண்பர்களாக அது வளருகின்ற அத்தனையும் அடிப்படையிலே பெற்றிருக்கிறது.

அவர் கடவுளரைப்பற்றித் தெய்வங்களைப் பற்றி எல்லாம் பாடினார் என்று சொன்னால் இன்றைக்கும் பாடுகின்றவர்கள் இருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இன்றைக்கே பாடுகின்றவர் களில் பலபேர் இருக்கின்றபோது அன்றைக்குப் பாடியது குற்றம் என்று சொன்னால் அது அறியாமையினுடைய விளைவு. ஆனால் அதே நேரத்தில் அவர் பாடுகிறபோது அந்தத் தெய்வங்களை — பலப்பல தெய்வங்களைப் போற்றுகிற முறையெல்லாம் அவர் கண்டித்துப் பாடியிருக்கிறார். அதிலே மூடநம்பிக்கை என்று அவருக்குத் தோன்றிய

மூடநம்பிக்கைகளை அவர் கண்டித்து இருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் மனிதன் கடவுளைத் தெளிவதற்கு ஏதுவான சில கருத்துகளை அவர் பாடாமல் விடவில்லை.

## இளைஞர்களை நெறிப்படுத்தும் கவிதைகளே தேவை

எனவே, அடிப்படையிலே நாம் கருதிப் பார்க்க வேண்டியது கவிஞன் உலகத்துக்குப் பொதுவானவன். ஆனால் அவன் ஒரு குறிக்கோளோடு இருக்கிறபோது தான் அதனாலே நாட்டுக்குப் பயன் கிடைக்கும். அந்தக் குறிக்கோள் என்பதும் அதற்கும் சில பொதுமைகளும் உண்டு; சில சிறப்புகளும் உண்டு. அந்தச் சிறப்புகளிலே ஒன்று—இன்றைய தேவை—சமுதாயத்திற்கு நினைவூட்ட வேண்டிய அப்படிப்பட்ட எண்ணங்களை நினைவூட்டுகிற கவிதைக் கடமையாகும்.

அந்தக் கடமை போற்றத்தக்கது என்பதற்குக் காரணம் வேறு எதனையும்விட நிலைத்து நிற்பது; நினைவில் நிற்பது. இன்னும் இளைஞர்கள் நினைந்து நினைந்து மகிழ்ந்து திரும்பச்சொல்லி எண்ணிப்பார்த்து அது காரணமாகத் தங்களுடைய உணர்வைச் செம்மைப் படுத்திக் கொள்ளக் கூடியது. அப்படிச் செம்மைப் படுத்துவதற்காகக் கவிதை இயற்றுகிறபோது அது இளைஞர்கள் தவறான பாதையிலே செல்வதற்குத் தூண்டுகிற கவிதைகள் குறைவாக இருப்பது நல்லது.

அந்த வகையிலே கவிஞர் மணிவேந்தன் அவர்களுடைய கவிதையிலே எந்த ஒரு கவிதையிலேயும் ஒரு குறைபாடு இருப்பதாக நான் காணவில்லை. இளைஞர்களுக்குக் காதலியைப் பற்றிப் பாடுகிறபோது இளைஞர்களுடைய கற்பனையிலே அவர்கள் மிகுந்த அளவுக்கு, ஆர்வம் கொள்ளத்தக்க அளவுக்குப் பாடுவதும், அப்படிப் பாடுகிறபோது அதைப் படைக்கின்ற ஆசிரியனுக்குக்

காதல் என்பது, பழைய காதலாக இருந்தாலும்கூட, படிக்கிற இளைஞர்களுக்கு அது புதிய காதலாக வடிவெடுத்து இடந்தெரியாத இடத்திலே காதல் வளர்ந்து, வளர்ந்த காரணத்தாலே பல்வேறு விதமான இடையூறுகளுக்கு ஆளாகி சமுதாயத்திலேகூட குறைபாடு களுக்கு ஆளாகி அந்தக் காதலே வெற்றி பெறா விட்டாலும்கூட ஒரு திரைப்படக் கொட்டகையிலே ஒட்டியிருக்கிற பட அளவுக்காவது தங்கள் காதலை நிறைவேற்றிக் கொள்கிற ஆர்வம் இருக்கிற அளவுக்கு இளைஞர்களைத் தவறனான பாதையிலே செலுத்துவது சரியல்ல.

எனவே மணிவேந்தன் அவர்கள் இளைஞர்கள் படித்துப் பயன் பெறத் தக்க அத்தகைய கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். ஒரு நெறி நிற்கிற கவிதைகளாக இயற்றியிருக்கிறார்கள். கொள்கைகளைச் சொல்லுகிற போது யாரையும் மனம் புண்படுத்தாமல் அந்தக் கொள்கைகளை வரையறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் துணிவோடு சொல்ல வேண்டியவற்றைத் துணிவோடு சொல்லியிருக்கிறார்கள்.

நான் மிகைப்பட பாராட்டிவிட நேருமோ என்ற ஓர் அச்சத்திலே நான் இருக்கிறேன். என்ன காரணம் என்றால் அவர் என்னைப் பற்றியும் பாடியிருக்கிற காரணத்தால், அன்பழகர் கைம்மாறு கருதிப் பாராட்டு கிறார் என்று நீங்கள் கருதி விடக் கூடாது. அவர் ஏனோ என்னைப் பற்றியும் பாடினார். அவர் பாடுவதற்கு அது ஒரு கருப் பொருளாக ஆயிற்று என்று நான் கருது கிறேன்.

அவர் பாடிய அனைத்தும் என்னைக் குறித்துப் பாடிய அனைத்தும் உண்மை என்று நான் கருதுகிறவன் அல்ல. ஆனால் உண்மையே பாடினால் கவிஞனுடைய கவிதை சிறப்படையாது.

**கவிதைக்குக் கற்பனை தேவை:**

கவிஞனுடைய கவிதை சிறப்படைய வேண்டுமானால் கற்பனை இடம் பெற்றே தீரவேண்டும். கற்பனை இல்லாதபோது கவிதை, உடை இல்லாத அணங்கு போல ஆகிவிடும். ஆனால், அதற்காக உடைதான் அணங்கு என்று கருதுவது (சிரிப்பு) துணிக்கடையிலே இருக்கிற அணங்கினுடைய திருவுருவத்தை ஒத்ததாக ஆகிவிடும். எனவே உயிரோடு கூடிய அணங்குக்கு உடை அழகு செய்வதைப் போல கற்பனை தேவை.

ஆகவே என்னைப் பற்றிப் பாடிய கவிதையாக இருந்தாலும் கூட அதிலே கொஞ்சம் கற்பனை என்பது தேவைதான். ஒன்றை அளவுக்கு மேல் புகழ்வது என்பதும் போற்றுவது என்பதும் ஒரு வகையிலே சொல்லப் போனால் என்னைப் பாராட்டுவதற்கு அது தவிர வேறு வழியில்லாத காரணத்தால் அவரைப் பாராட்டச் சொல்லிக் கேட்டதற்குப் பின்னால் பாராட்டி ஒரு கவிதை எழுதுங்கள் என்று சொன்னால் கவிஞருக்கு வேறு வழி கிடையாது. பாராட்டுவது என்றால் ஏதாவது நல்லவற்றைத்தான் சொல்லிப் பாராட்ட முடியுமே தவிர 'அன்பழகன் என்றொருவன் உண்டு; அவன் எப்போதுமே சிடுமூஞ்சிக் குணம் உடையான்' என்று பாட முடியாது. (சிரிப்பு)

ஆகவே ஒன்றைப் பாடுவது என்று சொன்னால் பாராட்டித்தான் சொல்ல முடியும். பாராட்டிச் சொல்ல வேண்டிய காரணத்தால் பாராட்டுவதற்காகச் சொன்னவற்றை எல்லாம் உண்மை என்று நீங்கள் கருதுவீர்களேயானால் கவிதை படிக்கத் தெரியாதவர்கள் என்று பொருள். (சிரிப்பு) கவிதை படிப்பவர்கள் அதிலே உள்ள கற்பனைகள் நலத்திற்காகச் சொல்லப் படுகின்றன; அழகுக்காகச் சொல்லப் படுகின்றன; எதுகையும் மோனையும் எதற்காக வருகின்றனவோ அவற்றைப்

போல, கவிதை நலத்திற்காகப் பாராட்டுவதற்கென்று சில கருத்துகள் அங்கே வரும் என்பதை உணர்ந்து கொண்டு படிக்க வேண்டும்.

**அறிஞர் அண்ணாவும் கம்பர் கவிதையும்:**

அறிஞர் அண்ணா அவர்கள் கம்பருடைய கவிதை நலத்தை விரும்பாதவர் அல்ல. அதைப் படித்து உணர்ந்து மகிழாதவர் அல்ல. ஆனால் கம்பருடைய கவிதை நலம் ஒரு காவியத் தலைவனுக்குப் பெருமையாக அமைகிறபோது, அந்தக் காவியத் தலைவனாக இருக்கிற இராமனுக்குக் கிடைக்கிற சிறப்பு, பெருமை, புகழ் அதுபோல அவர் உருவாக்குகிற பக்தி அதன் மூலமாக ஏற்படுகிற வேறுபல உணர்வுகள் தமிழ் இனத்திற்கு ஏற்றதல்ல என்ற காரணத்தினாலேதான் அறிஞர் அண்ணா அவர்கள் கம்பருடைய கவிதையிலே குறைபாடு உண்டு என்பதை வாதத்திற்காக எடுத்துக் காட்டினார்கள்.

குறைபாடு இல்லாமல் கவிதை பாட முடியுமா? அது வேறு கேள்வி. ஆனால் குறைபாடேதான் கவிதையா? அதுவும் ஒரு கேள்வி. (சிரிப்பு) குறைபாடுகள் மிகுந்திருக்கிற கவிதைகளை வெளியிடாமலே கவிஞர்கள் இருப்பார்களேயானால், அதுவே நாட்டுக்குச் செய்கிற நல்ல தொண்டு. அதற்குக் கவிஞர்கள் தான் ஒருவருக் கொருவர் உரையாடி அந்தக் குறைபாடுகள் இருப்பதை உணர்த்த வேண்டும்.

குறைபாடு உள்ள கவிதை வெளிவரத் தேவையில்லை என்பதை — ஒரு தன்னம்பிக்கையை — உருவாக்க வேண்டும். என் கவிதை வெளி வந்து எனக்குப் பெயர் கிட்டும் என்று கருதுகின்ற ஒருவன், என் கவிதை வெளி வந்து என் பெயர் கெட்டு விடக் கூடாது என்ற

எச்சரிக்கை உணர்வும் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்வது இல்லை. காரணம் இந்தக் காலச் சூழ்நிலை, வாழ்க்கையிலே இருக்கிற பல்வேறு போட்டிகள் கவிதை உலகத்திலும் இடம் பெற்றிருக்கின்றன.

## காந்தாரி பெற்ற பிள்ளைகள் போல கவிதைகளைப் பெற்றெடுக்கக் கூடாது

கவிஞர்கள் சொல்வர்கள், கருத்தளவில்! வாழ்க்கையிலே அப்படி இல்லை. அதனாலே வாழ்க்கையிலே உள்ள இடர்ப்பாடுகள் காரணமாகக் கவிதை உருவாகாத போதுகூட உருவாக்கி வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது, காந்தாரி பெற்ற பிள்ளை போல. ஏனென்றால் பிள்ளைகள் இயல்பாகப் பிறக்காத போது காந்தாரி பெற்றெடுத்துவிட வேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தால் காந்தாரியும் பிள்ளை பெற்றெடுத்தாள். நூறு பேரைக் கூடப் பெற்றெடுத்தாள். ஆனால் அந்தப் பிள்ளைகளுடைய வாழ்க்கை எப்படி அமைந்தது — எண்ணங்கள் எப்படி அமைந்தன என்பதை விட அவை உருவாவதில் எத்தனை கலயங்கள் தேவைப் பட்டன என்பதைக் கதையிலே நாம் பார்க்கிறோம். அதைப் போலக் கவிதைகள் வெளி வருவது நல்லதல்ல என்ற எண்ணம் கவிஞர்களாக அரும்புகிறவர்களுக்கு உள்ளத்திலே ஆழமாகப் பதியவேண்டும்.

ஏனென்றால் நல்ல கவிதை நாட்டுக்கு நல்லது; நமக்கும் நல்லது. நல்லதல்லாத கவிதை நாட்டுக்குத் தேவையில்லை. நமக்கும் தேவையில்லை. அதனால் வரும் புகழும் நிலைக்காது என்ற உணர்வு ஏற்பட வேண்டும். ஆனால் அப்படி நல்ல கவிதை என்று நான் சொல்லுகிறபோது மறுபடியும் இங்கே நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**நல்ல கவிதை நாட்டுக்குத் தேவை :**

அந்த நல்ல கவிதை பெரும்பாலோருக்கு வாழ்வளிக்க, மிகப் பெரும்பாலான மக்களுடைய துயர் களைய பெரும், பாலோர்க்கு ஒரு பொது நோக்கு உருவாக, பெரும் பாலோருடைய உள்ளத்திலே என்றைக்கும் ஓர் ஊக்கத்தை ஏற்படுத்த — தன்னம்பிக்கை ஏற்படுத்த — அவற்றுக்குப் பயன்படுகிறபோது அந்தக் கவிதையினுடைய ஆற்றல் — அந்தக் கவிஞனை வறுமையிலே வாழவிட்டு விட்டாலும் கூட — அந்த நாட்டினைச் செழுமைப்படுத்த அது பயன் படும்.

கவிஞன், ஏக்கத்தை — பெருமூச்சை — கவிதையாக்கி வெளியிடுவானேயானால் அந்த ஏக்கமும் பெருமூச்சும் நாட்டு மக்களிடத்திலே அவனிடத்திலே ஏக்கத்தை உருவாக்கத் தொடங்கியிருக்குமே தவிர, பெருமூச்சாக நிற்குமே தவிர, அவலமாக நிற்குமே தவிர, ஓலமாக நிற்குமே தவிர அவர்களை வாழ வைக்கின்ற ஒரு பேராற்றலைத் தராது.

கடவுள் நம்பிக்கையோடுகூட ஒரு சமுதாயத்தை வாழ வைக்கிற மனப்பான்மையை உண்டாக்கக் கூடியவர்கள் பாடிய பாடல்களை நீங்கள் பார்த்தால், எல்லா உயிரை யும் ஒன்றென்று எண்ணி, அடுபசி எவருக்கும் ஆற்றி, மனதினுடைய பேதாபேதம் அகற்றி மனித சமுதாயத்தை வாழ வைப்பதற்கு வள்ளலார் பாடிய பாடலிலே கடவுள் பற்று உள்ளூர இருக்கிறது என்பதனாலே எனக்கு மாறு பாடு இல்லை.

**கடவுள் என்பது ஒரு சிந்தனை :**

மனிதனை வாழவைப்பதற்குக் கடவுளை அழைத்து வருபவன் யாராக இருந்தாலும் அதிலே வேற்றுமை இல்லை. கடவுள் என்பது ஒரு சிந்தனை. உடன்படலாம்; மாறுபடலாம். சிந்திக்கிறவனுடைய ஆற்றல் வல்லமை

யைப் பொறுத்தது. எல்லோரும் ஒரே வகையாகச் சிந்திக்க முடியாது என்ற காரணத்தால் கடவுள் நினைவோடு சிந்திப்பவர்களையும் நல்வழிப்படுத்து வதற்காக — சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக ஆக்கு வதற்காக — விவேகானந்தர் போன்ற கடவுள் பற்றுப் போல ஒரு கடவுள் பற்று இருக்குமானால் அது உலகத்தை வாழச் செய்வதற்குப் பயன்படுகிறபோது அது வரவேற்கத் தக்கதாகத்தான் இருக்குமே தவிர அதை மறுக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் கடவுளைப் பற்றிச் சிந்திக்காதே — நான் சொல்லவில்லை. மறுக்காதே — நான் கேட்டுக் கொள்ள வில்லை. மறுப்பவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் கடவுளைப் பற்றிச் சிந்திப்பதற்கும் மறுப்பதற்கும் எந்த அளவு அறிவு நிலை தேவைப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நான் இன்னும் அதனுடைய தொடக்க நிலைக்கே வராதவன் என்று என்னைப் பற்றிய கருத்தை நான் கொண்டிருக்கின்றேன்.

அறிஞர் அண்ணா அவர்களும்கூடச் சொன்னார்கள்: விஞ்ஞானியே கூட — ஈன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானியே கூட — அளவிட்டு அறிய முடியாத விண்ணைப்பற்றி வானைப் பற்றி எந்தெந்த வகையிலே ஆராய்ந்து காணலாம், அதுகூட ஒரு கட்டத்திலேதான் போய் முடியும் என்று கருதுகிற விஞ்ஞானிகூட இவைகள் எல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது தோன்றுகிற வியப்பை எண்ணினால் ஆத்திகமும் விஞ்ஞானமும்கூட நெருங்கி வந்து விடுமோ என்று நான் கருதுகிறேன்.

### ஈன்ஸ்டீன் தெரிவித்த கருத்து

அதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இருப்பதாகவே தோன்றவில்லை. கடவுளை எண்ணி வியப்புக்கு ஆட்பட்ட வனுடைய எண்ணமும், விஞ்ஞானத்திலே வியப்புக்குரிய

இடம் வரையிலே அளந்து பார்த்தவனுடைய எண்ணமும் நெருங்கி வருகிறது என்று ஈன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் தெரிவித்த கருத்தை எண்ணிப் பார்த்தால் அறிஞர் அண்ணா அப்போதே அதைத்தான் சொன்னார்.

இந்தக் கடவுள் என்ற எண்ணத்தை வைத்து அல்ல தகராறு; மாறுபாடு. எப்படி எண்ணுவது என்பதைப் பற்றித்தான். ஏனென்றால் இதுவரையிலே கண்டவர்களும் விண்டதில்லை; விண்டவன் எவனும் கண்டதும் இல்லை. கண்டவன் விண்டதில்லை என்பது கண்டதற்குப் பின்னாலே அவன் விண்டு சொல்லிக் கொண்டிருக்க அவனுக்கு நேரமில்லை. காணாதவன் அதைப் பற்றி அடிக்கடி பேசுகிறானே என்றால் அவனுக்கு அது தவிர வேறு வேலை இல்லை. (சிரிப்பு)

இந்த இரண்டு விதமான நிலைமைகளைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்கிறபோது கடவுள் கொள்கை என்பது வேறு; வழிபாடுகள் என்பது வேறு; சமயம் என்பது வேறு.

கடவுள் என்பது ஒரு சிந்தனையினுடைய எல்லைக் கோடு. அவ்வளவுதான். எண்களிலே நீங்கள் பார்ப்பீர் களேயானால் சுழி என்ற அந்த அடையாளம் வருகிற போது, சுழி அல்லது 'சீரோ' (zero) அதற்கு ஏதேனும் எண்ணிக்கை தகுதி உண்டா இல்லையா என்பது அது நிற்கிற இடத்தைப் பொறுத்ததே தவிர அதற்கென்று ஏதுமில்லை. சுழி, சுழிதான். ஒன்றுக்குப் பக்கத்திலே நிற்கிறபோது, பத்தாக்குகிறது அதனை; ஒன்றைப் பாத்தாக்குகிறது. அந்தச் சுழியை ஒன்றுக்குப் பின்னோ வேறு எண்ணுக்குப் பின்னோ ஏழு சுழியோ இருபத்தேழு சுழியோ வரிசையாக — தொடர்ச்சியாக இருபத்தேழு, நாற்பத்தெட்டு என்று சுழிகளை எழுதிக் கொண்டு போவோமானால் எழுத முடியாத அளவு எண்ணின் பெருக்கத்தை அது உணர்த்தும். அதைப்போன்று தான்— 'கடவுள்' என்னும் ஓர் எல்லைக்கோடான சிந்தனை

குறித்து — அதன் உண்மையோ இன்மையோ குறித்து உடன்பாடோ மாறுபாடோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

### பிழைப்புக்குப் பயன்படுத்தும் ஒரு கூட்டம்

ஆனால், அதன் அடிப்படைக் கருத்தை வைத்துக் கொண்டு சிலர் கடவுள் பெயரால் ஏற்படும் எண்ணத்தையே — சமயமாக்கி ஒரு தொழிலுமாக்குகிறார்கள்.

சிலர் அதை வைத்துக் கொண்டு சமயக் கட்டளையாக்குகிறார்கள். சில பேர் அதை வைத்துக்கொண்டு சில எண்ணங்களுடைய பின்னணியாக அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சில பேர் அதை வைத்துக் கொண்டு மனித இனத்தையேகூடப் பிரிக்கிறார்கள். சில பேர் மனித இனத்திலே தங்களை உயர்ந்தவர்களாக ஆக்கிக் கொள் கிறார்கள். ஒரு கூட்டமே பிழைப்புக்கு அதை அடிப்படையாகப் பயன்படுத்துகிறது என்ற எண்ணம் வருகிறபோது அது யார் என்பது முக்கியமல்ல. அந்த ஏமாற்றுக்களிலே இருந்து மக்களை மீட்பதற்கு உள்ள வழிகளில் கவிஞருடைய சிந்தனை செல்லுகிறபோதுதான் மனிதன், சமுதாயம் அல்லது நம்முடைய இனம் வாழ்வதற்கு வழி பிறக்கிறது.

அந்த வகையிலே நம்முடைய மணிவேந்தன் அவர்கள் கூடுமானவரையில் தான் அறிந்து கொள்ள முடியாத எல்லைக்குச் சென்று அதிலே இடர்ப்படுகின்ற கட்டத்தை அவர் அடையவில்லை. அறிந்து கொள்ளக்கூடிய எல்லையிலே அவர் நிற்கிறார். அறிவிக்க வேண்டிய எல்லையிலே நிற்கிறார். மற்றவர்களுக்குப் பயன்படுகிற எல்லையிலே நிற்கிறார். அப்படி அமைந்திருக்கின்ற இந்தக் கவிதைகள் — நண்பர்கள் சொன்னதைப் போல — நானும்கூட இப்போது பல கவிதைகளை எடுத்து வைப்பேன்; ஆனால் நான் எடுத்துக்காட்டிப் பேசுவது என்பது நான் ஆசிரிய

ராக இருந்து, அமீது மாணவராக இருந்தாலும்கூட (சிரிப்பு) படிக்கிறபோது எப்படி படித்ததை நினைவில் அவர் மறக்காமல் இருந்து அப்படியே எடுத்துக்காட்டிப் பேசுகின்ற ஆற்றல் உண்டோ அப்படி இப்போதுகூட அவர் நல்ல முறையிலே எதையும் உணர்ந்து சுவைத்து மகிழ்ந்து ஒரு சிறு நாடகத்தைப்போலக் கவிதையை உருவாக்கிக் காட்டுகிற ஓர் ஆற்றலை அமீது பெற்றிருக்கிறார்.

எனக்கு நாடகமாடத் தெரியாது. (சிரிப்பு) நாடகம் ஆடத் தெரியாது என்றால் நான் அறிந்த சுவையை, மற்றவர்களுக்கு அதே சுவையோடு உணர்த்துகிற ஒரு பயிற்சியை நான் அதிகம் பெற்றுக் கொள்ளவில்லை. அப்படிப் பெற்றுக் கொள்ளாததற்குக் காரணம் என்னுடைய எண்ண ஓட்டம், கவிஞருடைய எண்ண ஓட்டத்தைவிட விரைவு உடையது. எனது எண்ண ஓட்டம் ஓடுகிற வேகத்தில் வருகிற கவிதையை நான் படித்துக் காட்டுவேனேயானால் ஒரு வேளை அது உங்களுக்குக் கவிதையாகத் தோன்றாது. (சிரிப்பு)

ஆகவே, என்னுடைய எண்ண ஓட்டத்தைத் தடுத்துக் கொண்டு, நான் கவிதையைப் படிக்கத் தொடங்குவேனே யானால் பேசுகிறவன் அன்பழகனாக இருக்க மாட்டான். (சிரிப்பு) எனவே நான் நானாகவும் இருக்க வேண்டும். நான் எண்ணுவதையும் வெளிப்படுத்த வேண்டும். இடையிலே மணிவேந்தனும் வரவேண்டும். எந்த அளவுக்கு வருவார்கள் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் கூட நான் எண்ணிப் பார்த்ததைச் சொல்ல விரும்புகிறேன்.

**புரட்சிக் கவிஞர் நடையே மணிவேந்தனின் கவிதை நடை**

இங்கே நண்பர்கள் சொன்னதைப் போல புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய நடையும் மணிவேந்தனுடைய கவிதை நடையிலே மிளிருகிறது. அதேபோல

பாரதியாருடைய நடையிலேயும் சில பகுதிகள் அழகாக மணிவேந்தனின் கவிதைகளில் இடம் பெற்றிருக்கின்றன. சந்த ஓசை ஏற்படத்தக்க கவிதைகளையும் அவர் நல்ல முறையில் பாடிக் காட்டுகிறார். உணர்ச்சி கொந்தளிக்கின்ற சொற்றொடரையும் அவராலே கையாள முடிகிறது. சொற்றொடர் என்று நான் சொல்லுவதை விட கவிதை வரிகளையும் அவராலே கையாள முடிகிறது.

புரட்சிக் கவிஞரைப் பற்றி அவர் பாடிய அந்தப் பாடல் வரிகள்,

“நால்வருணச் சுழலுள் சிக்கி
நம்மவர் நடுங்க லாமா?
மேல்வருணம் ஆட்டம் போட
கீழ்வருணம் ஒடுங்க லாமா?
தோல்வருணப் பகையை மாய்க்கத்
தூக்கினார் கவிதை ஈட்டி;
நூல்வருண மேனி யோடு
நுழைந்தவர் நடுங்க லானார்”

என்பதிலே ஆழ்ந்த கருத்தும் இருக்கிறது. பாரதிதாசன் அவர்களை நாம் எப்படி எண்ணிப் பார்ப்போமோ அப்படியே சொல்லுகிற ஆற்றலும் இருக்கிறது,

“யார்எதைச் சொன்ன போதும்
இலட்சிய வெறியில் நின்ற
பேரறி வாளர்; பாயும்
பெரும்புலி; சமத்து வத்தின்
வேரதைக் காத்து நின்ற
விழிநிகர் தமிழ வேங்கை!
பாரதி தாசன்; நேசன்;
பைந்தமிழ் வாசன் வாழ்க!”

என்று முடிக்கின்றபோது கருத்து நேரடியாகப் பாய்கின்றது. அந்தக் கருத்து நேரடியாகப் பாய்ச்சுகின்ற

ஆற்றல் பாரதிதாசனுக்குத்தான் மிகச் சிறந்த வகையிலே கைவந்த ஒருகலை. அந்தக் கலையை மணிவேந்தனிடமும் நாம் காணுகிறோம்.

அதேபோல கோர்வை நலத்தோடு மொழி வளத்தோடு அவராலே பாடமுடிகிறது என்பதை 'விழித்தெழு தமிழனே' என்ற பாடலில் நாம் காண்கிறோம்.

மலைவளம் செழித்திடும் கனிவளம் கொழித்திடும்
கலைவளம் பெருகிடும் தமிழகம் உயர்ந்திட
வலையினை விரித்திடும் பகைவரை மிதித்திட
அலையெனக் கொதித்தெழு அருந்தமிழ் மறவனே!''

என்று பாடிய அந்த வரிகளில் தமிழ், திருக்குற்றால அருவி போலப் பாய்கிறது. கேட்பதற்கே இன்பம் தருகிறது, அந்த ஓசை.

அதைப்போல 'கலைவளர்த்த கலைஞர் அண்ணா' என்பதிலே இரண்டாவது விருத்தம்,

'' கடவுளர்கள் ஆதிக்கம்; அவதா ரங்கள்;
கண்மூடி வழக்கங்கள்; புராணப் பொய்கள்;
மடமைகள்; அடியார்கள்; வரங்கள்; வெற்று
மாயங்கள்; மந்திர தந் திரங்கள்; அட்டை
உடைவாள்கள்; பறக்கும்கம் பளங்கள்; தேவ
லோகங்கள்; கலைக்குதவாக் கதைகள் தம்மால்
கடைந்தெடுத்த பிற்போக்கு நிலைக்குத் தாழ்ந்த
கலையுலகை மாற்றியவர் அறிஞர் அண்ணா''

என்று அதுவும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய நடையில் ஏறத்தாழ அதே வகையான கருத்துத் தெளிந்தோங்கி திளைத்து நிற்கிறது.

அதேபோல அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் சொல்லுகிறபோது,

"'படிப்பாளி மட்டுமல்ல; நாட கங்கள்
படைப்பாளி மட்டுமல்ல அண்ணா நல்ல
நடிப்பாளி அவராகும்; நடிப்பின் மூலம்
நடிப்பிற்கே இலக்கணத்தை வகுத்த மேதை.''

இன்னும் தொடர்ந்து வருகிற அறிஞர் அண்ணாவைப் பற்றிய அந்த வரிகளும், அதேபோல இன்னொரு இடத்திலே அறிஞர் அண்ணா அவர்களை இழந்ததைப் பாடுவதையும் நண்பர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

அதிலே வருகிற ஒரு கருத்து. அறிஞர் அண்ணாவின் இழப்புக்குக் காரணமாக இருந்தவன் யார் என்று கருதுகிற ஒரு பழைய உணர்வு நம்மோடு இருக்கிற காரணத்தால் அந்தப் பழைய உணர்விலே இருந்து நம்மாலே விடுபடவும் முடியாது. தானாக உயிர் போனாலும் யாரோ உயிரைப் பறித்துக் கொண்டதாகக் கருதுகிற எண்ணம் சிலருக்கு உண்டு. இன்றைக்குப் பேசுகிறவர்களும் அப்படித்தான் பேசுகிறார்கள். (கை தட்டல்) ஆனால் யாரோ என்று எண்ணுகிற எண்ணம் வராது.

**ஓர் எல்லையைக் குறிக்கின்ற**
**குறிச்சொல்லே, காலன்:**

எமன் என்று சொல்வது எப்படி வந்தது என்று சொல் வகையிலே நீங்கள் எண்ணிப் பார்த்தால் ஏதோ ஒரு வகையிலே கொடுமையான ஒரு போர்க்களத்திலே அழிக்கின்ற கடமையைச் செய்த ஒரு வேந்தனுக்கு எமன் என்று பெயர் இருந்து, அதனாலே அழிவுக்கு அடையாள மாக எமன் என்ற பெயர் வந்திருக்கக் கூடும். அது வடமொழி வழி, தமிழ் மொழியிலே பார்த்தால் அது ஒரு காரணப்பெயர்.

காலன் என்பது எல்லைக்கு, எல்லையிட்டு விடுகிறது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எல்லை வந்து விடுகிறது.

எல்லை வந்து விடுகிறபோது, எல்லையைக் குறிக்கின்ற ஒரு குறிச்சொல்லாக அமைந்த பெயர்தான் காலன். அதேபோல பகலவன் என்று சொல்கிறபோது பகலாக ஒளி வீசுகிறான், ஆகவே பகலவன். அந்தப் பகலவன் என்ற சொல்தான் பகவன் என்ற சொல்லுக்கே அடிப் படையாக இருந்து பின்னால் பகவானாக அது மாறி யிருக்கவேண்டும். பகலவன் பகவன் ஆனதற்குப் பின்னர், பகவன் வடமொழியிலே இருந்து தமிழிலே வந்து சொல்லாய் இடம் பெறுகிறபோது மூலம் பகலவன் என்பது நமக்குத் தெரியாத காரணத்தாலேயேதான்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று அன்றைக்கு இருந்த மக்கள் பகவன் என்ற சொல்லுக்குச் சற்று அழுத்தம் தந்ததன் காரணமாக வள்ளுவரும்கூட உடன்பட்டு எழுதியிருக்கக்கூடும்.

அது, பகலவன் முதற்றே உலகு என்று எழுதியிருப் பாரேயானால் அதுவும் பொருந்தும். அகரம் என்று சொன்ன காரணத்தால் பகலவன் என்று சொல்ல முடியாத நிலைமை ஏற்படவில்லை. இருந்தாலும் பகவன் என்று சொல்லியது ஒருவேளை இலக்கணத் திற்காக அவ்வாறு எழுதினார் என்று கொண்டாலும்கூட பகலவன் பகவன் என்று வடமொழியிலே ஆவது என்பது மிகமிக இயல்பு.

தமிழ்தான் தொன்மை உடைத்து என்று சொல் அளவிலே எண்ணுவதற்கு இடம் இருக்கிறபோது பகலவன் பகவன் ஆகியிருப்பான் என்பதிலே அதிக வேறுபாடு இல்லை. இருந்தாலும்கூட ஒவ்வொரு சொல்லோடு சில எண்ணங்கள் கலந்து கலந்து உருவாகி நாளடைவில் மக்களுடைய உள்ளத்தில் அது வேறுவிதமாகப் பதியும். அப்படிப் பதிந்த ஒரு சொல்தான் காலன் என்பதும்.

ஆனால் இங்கே 'கதறி அழ வைத்தவனே காதகனே உன்னையும் யாம் கதறியழ வைக்கும் காலம் வரும் காத்திருப்பாய்' என்று காலனுக்கே சவால் விடுகின்ற முறையிலே அமைந்திருக்கிற வரிகள் அவை. காலனுக்கே ஒரு முடிவு கட்டுகிற ஒரு காலம் வரும்; கதறியழச் செய்கிற ஒரு காலம் வரும் என்று பாடுகின்ற அந்த வரிகள் ஒரு கவிஞனுக்கு வரக்கூடிய நம்பிக்கையை எடுத்துக் காட்டுவது.

**எதையும் தாங்கும் அண்ணாவின் இதயம்**

அதைப்போல அடுத்தாற்போல 'சந்தனத்துப் பெட்டியிலே சாய்ந்துறங்கும் சாந்தமகன் வந்தனத்திற்கு உரியோனாய் வாழுகின்றான் நம் மனத்தில்'. 'எதையும் தாங்குகின்ற இதயம் உறங்குகின்ற இடம் மட்டும் காணுகிறோம். இதயத்தைக் காணோம்' என்று அறிஞர் அண்ணா அவர்களுடைய இடத்தைக் காணுகிறோம், இதயத்தைக் காணவில்லை என்கிறார்.

இன்னொரு கவிஞர்— **கலைஞர் அவர்கள்— அந்த இதயத்தை இரவல் பெற்றிருக்கிற காரணத்தால்** இவருக்கு அது காணவில்லை. (சிரிப்பு) இப்போது அவர் கவிதை பாடினால் இதயத்தைக் காணோமே, அதை என்னருந் கலைஞர் பெற்று விட்டாரே என்று பாடக்கூட நேரிட் டிருக்கக் கூடும். இது ஏற்கனவே பாடிய காரணத்தால் அத்தோடு நின்றுவிட்டது.

மேலும் தொடர்ந்து பாடுகிறபோது

'' சந்தமொழி தந்தமகன்
சாவுலகம் சென்றானே!
செந்தமிழே! தாயே!
சீரார்ந்த தெய்வதமே!
எம்தலைவன் அண்ணா
இருக்குமிடம் காட்டிவிடு!

எம் தலைவன் திருவடியில்
எங்களையும் சேர்த்துவிடு!
கொன்ற கொடுங்காலன்
கொடியநெஞ்சம் மாறாதோ!
நின்ற பெரும்பணிகள்
நெடும்புவியில் தொடராவோ?
சென்றவனும் மீண்டுவந்து
சிரித்தமுகம் காட்டானோ?
என்றும்அவன் எமக்காக
இப்புவியில் வாழானோ? ''

என்பது கவிஞர் மணிவேந்தன் அவர்களுடைய உள்ளம்— இங்கு எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல — எந்த அளவு குழைந்து நின்றது. அறிஞர் அண்ணாவினிடத்திலே எந்த அளவு ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தது என்று எடுத்துக்காட்டும்.

எனவே அந்த வகையிலே நான் நம்முடைய அருமைக் கவிஞர் மு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், மணி வேந்தன் என்ற புனைபெயர் பெற்றதற்குப் பொருத்த மான தகுதி உடையவர். கவிதை மணிவேந்தராக அவர் விளங்குகிறார். எனவே அந்தப் பொருத்தம், தகுதி அனைத்தும் அவருக்கு இருக்கின்றன என்பதற்காக நான் பாராட்டுகிறேன்.

அவர் இதற்கு முன்னரும் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருப்பதையும் அறிந்து நான் இந்த நேரத்தில் அவரை வாழ்த்துகிறேன். அவற்றை எல்லாம் படிக்கின்ற வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியவில்லை; படிக்க வில்லை. இங்கே பேசிய நண்பர் ஒருவர் சொன்னதைப் போல ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையில் பல நூல்கள் எழுதி இந்த ஒரு நூல் எனக்குப் பதம் பார்ப்பதற்குக் கிடைத்ததாக நான் கருதிக் கொள்வேன்.

கவிஞர் மணிவேந்தன் அவர்களிடத்திலே கவிதைக்கரு இருக்கிறது. அது வளரவேண்டும் என்று நான் வாழ்த்து கிறேன். கொள்கை உணர்வு இருக்கிறது. அது நிலைக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். இனப்பற்று இருக்கிறது. அதை இழக்கலாகாது என நான் வலியுறுத்துகிறேன், தமிழ்மொழியைக் காத்திடவேண்டும் என்ற வெறி உணர்வு இருக்கிறது. அந்த வெறி மங்கலாகாது—என்று குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் மணிவேந்தராகத் திகழுகிறீர்கள்; எந்நாளும் அவ்வாறே வாழ்க என்று வாழ்த்தி என் உரையை முடிக்கிறேன்.

(10-12-80 அன்று சென்னை மத்திய நூலகக் கட்டடத்தில் நடந்த ''மணி வேந்தன் கவிதைகள்'' நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் ஆற்றிய உரை.)

☐ ☐ ☐

# கவிதையும் ஆய்வும்

நம்முடைய நண்பர் பேராசிரியர் மு. பி. பாலசுப்பிர மணியன், மிகச் சிறந்த அரிய உழைப்போடு, ஆய்வு நடத்தி வெளியிட்டிருக்கிற ''வாணிதாசன் கவிதைகள்—ஓர் ஆய்வு'' என்ற சிறந்த நூலை வெளியிடுகிற ஒரு நல்ல வாய்ப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய உளமார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த்தொண்டு ஆற்றுகிற பெருமக்களைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைப்பதால் இத்தகைய விழாக்களில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஓர் இயக்கத்திலே, ஒரு கட்சியிலே மிகவும் தொடர் புடையவன் என்கின்ற காரணத்தினாலே தமிழறிஞர்கள் பலரை அவ்வப்போது சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்படுவதில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்ற நான், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களைக்கூட ஐந்தாண்டு களுக்கு ஒரு முறைதான் சந்திக்கும் வாய்ப்பைப் பெறு கிறேன். அதற்கு மிக முக்கிய காரணம் தமிழ்த்தொண்டே தனது வாழ்க்கைத் தொண்டு என்றிருந்த அவர் கல்வித் தொண்டே தனது கடமைத் தொண்டு என்று கருதி இத்தகைய கல்விப் பணியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். அவர் செய்தது போல நாட்டு மக்களுக்கு

ஆற்ற வேண்டிய கடமையைப் பரவலாக நிறைவேற்ற வேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற உணர்வு காரணமாக, இத்தகைய இலக்கிய விழாக்களிலே கலந்து கொள்கிற வாய்ப்பை நான் இழந்து விடுகிறேன்.

இவ்விழாவிலே தலைமை ஏற்றுள்ள நடுவர் இரத்தின வேல் பாண்டியன் அவர்கள் ஏறத்தாழ பதினைந்து ஆண்டு களுக்கு முன்னர் என்னோடும் நான் சார்ந்திருக்கிற இயக்கத்தோடும் இரண்டறக் கலந்திருந்தவர்கள். அந்தக் கடமையை அன்று அவர் செம்மையாக நிறைவேற்றினார். இன்றைக்கும் அவர் ஏற்றிருக்கிற பொறுப்பைச் செம்மை யோடும், சிறப்போடும் செய்திருக்கிறார்கள். இப்படி ஒரு தமிழ்க் குடும்பமாக நம்முடைய தமிழ் அறிஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் சந்திக்கின்ற நிகழ்ச்சி அடிக்கடி நிகழுமானால் தமிழறிஞர்கள் மூலமாக ஒருமித்த கருத்து தமிழகத்திலே உருவாக வாய்ப்புண்டு.

ஒரு பரந்த விரிந்த உணர்வு இல்லாவிட்டால் தமிழனுக்கு எதிர்காலம் இருக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

சாதிப்பற்று ஒழிய வேண்டும். சமயப்பற்று அடங்க வேண்டும். பகுத்தறிவு துளிர்க்க வேண்டும். இவைகள் காரணமாக ஏற்படுகிற கருத்து வேறுபாடு ஓர் உடன் பாட்டு நிலையிலே, அன்பு காரணமாக, பண்பு காரண மாக ஒரு சமநிலைக்கு ஆளாக வேண்டும்.

என்னுடைய இளவல் மு. பி. பாலசுப்பிரமணியன் இத்தகைய சிந்தனையிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, தமிழ்ப்பற்று அரும்பி, திராவிட இனப்பற்றாக, இயக்கப்பற்றாக மலர்ந்து இன்று தமிழ்த்தொண்டு வீசும் மலராக விளங்குகிறார். ஓர் எழுத்தாளராக, பேராசிரிய ராக இன்றைய தினம் ஓர் ஆய்வாளராக பல தகுதி களையும் அவர் நிலைநாட்டியிருக்கிறார்,

பேராசிரியர் வெ. தெ. மாணிக்கம் அவர்கள், நமது மு. பி. பாலசுப்பிரமணியனைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'கொள்கை உறுதி உடையவர் — ஒரு கொள்கையிலே நிலைத்து நிற்பவர்' என்று பாராட்டினார். இது தமிழர்கள் பலருக்கும் வேண்டப்படும் ஒன்று.

கொள்கை ஒன்று என்ற வகையிலே உறுதியிருந்து நிலைமைக்கேற்ப, இடத்திற்கேற்ப அந்தக் குறிக்கோளில் நிற்பவன்தான் ஒரு சிறந்த அறிஞனாக—பண்பாளனாக—விளங்க முடியும்.

டாக்டர் மு. வ. அவர்கள் நான் சார்ந்த இயக்கத்தைச் சேர்ந்தவரல்ல. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வினுடைய வழியைப் பெருமளவுக்கு ஏற்றுக்கொண்டவர். ஆனால் திரு. வி. க. வினுடைய வாழ்க்கையிலே அவருக்கு ஏற்பட்ட குறைகளையும் உணர்ந்தவர். மிகச்சிறந்த சான்றாண்மை மிக்கு விளங்கிய திரு. வி. க. அவர்கள் வாழ்க்கையிலே வெற்றி பெறவில்லையென்பதை மு. வ. அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அப்படி உணர்ந்திருந்த காரணத்தினால் தன்னுடைய வாழ்க்கையிலே வெற்றி பெறவேண்டும், தமிழராக வாழவேண்டும், தமிழுக்காகத் தொண்டாற்ற வேண்டும், அதிலே வெற்றியும் காணவேண்டும், நாட்டுக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்று கருதிய மு. வ. அவர்கள் அவ்வாறே வாழ்ந்திருந்தார்கள். தமிழருக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கிய பெருமைக்குரியவர் ஆனார்கள்.

இதைச் சொல்லக் காரணம் கொள்கை என்பது, குறிக்கோள் என்பது ஒரு கட்சிக் கொள்கைதான் என்று கருதுகிறவன் அல்ல நான். அதனால் கட்சியை விட்டுப் போனால்தான் குறிக்கோள் என்பதை ஏற்றுக் கொள்கிறவனுமல்ல. இந்த இரண்டுக்குமிடையில் ஒரு கட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு குறிக்கோள் வெற்றி பெற வேண்டும்.

திரு. வி. க. அவர்கள் தேசிய இயக்கத்திலிருந்து வெளியேறினார்கள். அந்த இயக்கத்தை விட்டு வெளியேறினார்களே தவிர வேறு இயக்கத்தில் உறுப்பினராகச் சேரவில்லை. செந்தமிழ் வளர்க்கும் நெறியையே அவர் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

இளைஞராக இருக்கின்ற மு. பி. பா. அவர்கள் ஒரு பேராசிரியராகப் பணிபுரிகின்றார்; ஒரு கொள்கையோடு, நெறியோடு வாழ்கிறார் என்பதைப் பார்க்கின்றபோது நான் பெருமகிழ்வு அடைகிறேன். அப்படி அவர் வாழ்கிற காரணத்தினாலேதான், அவர் ஏற்கெனவே எழுதிய நூல்களை நான்வெளியிட்டிருக்கிறேன்.

இனிய கவிதைகளை, செந்தமிழ் வளர்க்கிற உணர்வுடைய கவிதைகளை, பல்வேறு நடைகளில் பாங்குற இயற்றியவர் நம்முடைய மு. பி. பா. எனவேதான் கவிஞர் தஞ்சைவாணன் தன்னுடைய கவிதையில் 'முத்தமிழ் பிறந்தது பாவினிலே' என்று கூறி அவருடைய கவிதையில் முன் எழுத்துக்கள் எல்லாம் ஒரு அடையாளமாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார்.

ஆனால் ''மு'' என்பதற்குத் தனிச்சிறப்பு இருக்கிறது. மு. வ. பெயரிலே அமைந்திருக்கிறது. மு. க. பெயரிலே அமைந்திருக்கிறது. ஆனால் அதற்காக ''மு''வைச் சில பேர் ஒட்ட வைத்துக் கொண்டால் அதற்குப் பொருள் வேறாகி விடும்.

பச்சையப்பன் கல்லூரியினுடைய பெருமையை நீங்கள் அறிவீர்கள். இந்த உணர்வு, தமிழ் பேசுகிற உணர்வுதான் பாலசுப்பிரமணியன், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நடத்துவதற்கு வழிகோலியது. அதற்கு ஒரு கருவைத் தேர்ந்தெடுத்தார்.

கவிஞர் வாணிதாசன் கவிதைகளைப் பற்றி அவர் ஆய்வு நடத்த முற்பட்டது மிகப் பொருத்தமான கடமை

என்று நான் உணர்கிறேன். கவிஞர் வாணிதாசன் அவர்கள் பாவேந்தருடைய மாணவராக, அவர்தம் தோழராக, சிறந்த கவிஞராக விளங்கியவர். கவிஞரோடு சேர்ந்து வாழ்கிறவர்களெல்லாம் கவிஞராவதில்லை. ஆனால் கவிஞர் வாணிதாசன் பாவேந்தரிடமிருந்து தலைசிறந்து விளங்கியவர்.

கவிஞர் வாணிதாசன் முற்போக்குச் சிந்தனைகளை உடையவர். இந்த முற்போக்குச் சிந்தனை, பாரதியார் காலத்திலேயே உருவாகியது. ஆனால் பாரதியார் பாடலில் பழமையும் புதுமையும் கலந்திருந்தன. இறை வழிபாடு என்கிற பழமை ஒரு புறமிருக்கும். மறுபுறம் ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று கூறும் அறிவிலிகாள் என்ற புதுமைக் கருத்துமிருக்கும். பாரதியார் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கினார். அந்தப் பாலத்திற்கு அடித்தளமாக வடலூர் வள்ளலார் விளங்கினார்.

ஆனால் தமிழ்நாட்டிலே புதுமையைப் புகுத்திய தன்மான இயக்கம் பிறந்தது 1925 இல் தான்.

நான் கலைஞனாக என்னை ஆக்கிக் கொள்ளவில்லை. நான் ஒரு படைப்பாளியுமல்ல. திறனாய்வு செய்பவனுமல்ல. ஆய்வாளனுமல்ல. பின் என்னவென்று கேட்டால் இவர்களையெல்லாம் சோதிப்பவன்; இவர்களையெல்லாம் பற்றி அறிந்து கொள்கிற வாய்ப்பு உடையவன்.

கவிஞர் வாணிதாசன் அவர்கள் ஒரு மரபுக்கவிஞராக, அதே நேரத்தில் புதுமை உணர்வை வரவேற்கிற கவிஞராக நல்ல சிந்தனையாளராக விளங்கியது சிறப்பிற்குரியது. எனவே வாணிதாசனைப் பற்றி ஆய்வு நடத்தியது மூலமாக, பாவேந்தர் பாரதி தாசன் பரம்பரையில், ஒரு தலைசிறந்த கவிஞரை நம்முடைய மு. பி. பா. அவர்கள் அனைத்துக் கோணத் திலும் ஆய்வு செய்திருக்கிறார். அவற்றை ஒவ்வொன்

றையும் எடுத்துக்காட்டுவது இந்த அவைக்கு இப்போது இயலாத ஒன்று. தேவைப்படுவதும் அல்ல.

அவருடைய கொள்கை எப்படிப்பட்டது என்பதை, கருத்து எப்படி அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. வாணிதாசன் ஒரு புதுமையான தமிழகத்தைக் கனவு கண்டார். ''தமிழை இகழ்ந்தால் குழவிக்கும் மன்னிப்பில்லை'' என்றவர் அவர்.

தமிழை இகழ்ந்தவர்கள் எத்தகைய மேலான நிலைக்குப் போனாலும் அவர்கள் கீழேதான் வருவார்கள் என அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழுக்குப் பகையாயிருப்பவர்கள் தமிழகத்தில் தலைகாட்ட முடியாதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன் மாணாக்கர், தன்னோடு பயின்றவர், ஒருசாலை மாணாக்கர், ஆசிரியர், தன் உரையாசிரியர் போன்றோர் மட்டுமே ஒரு நூலை ஆய்வு செய்யலாம் என்ற நிலை முன்பு இருந்தது. இப்போது அப்படியல்ல.

தமிழிலே ஒரு நூல் வெளி வருமானால் ஆய்வு நிகழத்தான் செய்யும். நிகழ்த்த உரிமை உண்டு. மொழி வளர்ச்சியே ஆய்வு முறையில்தான் அடங்கியுள்ளது.

கவிஞர் வாணிதாசன் கவிதைகளில் குழந்தைகளுக்கான அறவுரை விளக்கம் அடங்கியுள்ளது. அதிலே அவர் சொல்லுகிற கருத்து அவருடைய மனப்பான்மையைக் காட்டும். ஆண்டான் அடிமை வேண்டாம். ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் — தாய்மொழிக்கு ஆக்கம் தேவை. சோற்றைப் பகிர்ந்தால் வேற்றுமை இல்லை. துடியிடையாரை அடிமையாக்காதே. இப்படி ஒரு புரட்சிச் சிந்தனைகளின் பெட்டகமாக — புதுமைச் சிந்தனைகளின் பெட்டகமாக — அவர் கவிதைகள் விளங்கின.

இவ்வாறு 20 ஆம் நூற்றாண்டு இளைஞர் உள்ளத்தில், தன்னுடைய இனத்தை உயர்த்தி எப்படி வாழவேண்டும் என்பதை, எண்ணமாக உருவாக்கியிருக்கிறார் அவர்.

கவிஞர் வாணிதாசன் அவர்களுடைய சிறப்பாற்றல் களை அவருடைய இலக்கியத் தன்மைகளையெல்லாம் டாக்டர் மு. பி. பா. அவர்கள் மிக விளக்கமாக இந்த ஆய்வு நூலில் எடுத்துக் காட்டுகிறார்கள். அதில் என்னென்ன பாடல்களை இசைப்பாடல்களை எப்படி யெல்லாம் அமைத்து தமிழகத்தில் தமிழிசை பரவ வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

கரு, உரு, திரு மூன்றும் வாய்ந்ததாக இருப்பதுதான் கவிதை. இந்த அடிப்படையில் அமைந்தது தான் வாணிதாசன் கவிதைகள் என்பதை இந்த ஆய்வு நூலில் மு. பி. பா. குறிப்பிடுகிறார்.

வாணிதாசனுடைய கருத்துக்களையெல்லாம் மற்ற வர்கள் உணரச் செய்வதற்காக நம்முடைய மு. பி. பால சுப்பிரமணியன் அவர்கள் இந்த அரிய நூலை இயற்றி யிருக்கிறார். அவருடைய ஆய்வு நூல் எல்லா வகைக் கருத்துக்களையும் சேர்த்து இடம் பெறச் செய்திருக் கிறது.

இவ்வாய்வு நூலைப் படைத்துத் தந்த இளவல் மு. பி. பா.வைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

(28-3-87 அன்று அண்ணாநகர் வள்ளியம்மாள் பள்ளியில் நடை பெற்ற "வாணிதாசன் கவி தைகள் — ஓர் ஆய்வு" நூல் வெளியீட்டு விழாவில் பேரா சிரியர் ஆற்றிய உரை)

□ □ □

# மரபும் புதுமையும்

உண்மையான கவிஞன் யார் என்று ஆழ்ந்து எண்ணிப் பார்க்கிறபோது தன்னைத்தானே வெளிப் படுத்திக் கொள்கிற ஆற்றல் பெற்றவனே, தான் உணர்ந்ததை உணர்ந்தவாறு வெளிப்படுத்துகிறவனே உண்மையான கவிஞன் ஆவான். தன்னுடைய உள்ளத் தின் முழுத் தோற்றத்தை "The poem is the outer form of the personality of the poet" என்று தெரிவிப் பார்கள். தன்னுடைய முழு உணர்வை — தன்னுடைய முழு இலட்சியத்தை மக்களைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ ஒருவன் எண்ணுகிற அந்த முழு எண்ணத்தை வெளியிடுவதிலே தான் கவிஞன் பிறக்கின்றான். அந்த வகையிலே முழுமையான, தான் எண்ணுகிற அந்த முழு எண்ணத்தை—தன்னுடைய உள்ளுணர்வை—தன்னுடைய பேரார்வத்தை — தன்னுடைய வேட்கையை — குறிக் கோளை—கொள்கையை இவற்றையெல்லாம் வெளியிடு கின்ற ஒரு வாய்ப்பாகத் தன்னுடைய ஆர்வத்தின் முழு வடிவத்தை உலகத்துக்குக் காட்டுகின்ற ஒரு வாய்ப்பாகக் கருதித்தான் கலைஞர் அவர்கள் கவிதைகளை வடித் திருக்கிறார்.

இன்னும் ஒருவகையிலே பார்த்தால் உரைநடை எழுது கிறபோது அந்த உரைநடையில் எவ்வளவு அழகான கருத்துக்களை — தெளிவான சிந்தனைகளை — வாதிடு வதற்கான கருத்துக்களை ஓர் ஆற்றல் மிக்க எழுத்தாளன்

எழுதினாலுங்கூட அவன் மனதிலே ஏற்படும் மகிழ்ச்சி அந்த அளவுக்குப் பிறப்பதில்லை. பேசுகிறபோது ஓரளவு மகிழ்ச்சி பிறக்கிறது. எழுதுகிறபோது ஓரளவு மகிழ்ச்சி பிறக்கிறது.

ஆனால் எழுதுகிறபோது, பேசுகிறபோது தோன்றுகிற அந்த இன்பம் கவிதை எழுதுகிறபோது கவிதையாக ஊறும்போது, கவிதையை வடிக்கிறபோது அந்த இன்பம் பெரிதாகிறது; நிறைவடைகிறது. அந்த இன்பம் அவனை மகிழ வைக்கிறது. எழுதுகிற எண்ணத்துக்கு வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ அதை எண்ணிப் பார்ப்பதிலே ஒரு நிறைவான வெற்றி காண்கிறான். அப்படி எண்ணிப் பார்ப்பதிலே கூட ஒன்றை முழு அளவிலே எண்ணிப் பார்க்கிற ஒரு வாய்ப்பு கவிஞனுக்கு இருக்கிறது. ஒன்றை எண்ணிப் பார்க்கின்ற வாய்ப்பு எழுத்துக்கு இருக்கிறது என்று சொன்னால் அதை முழு அளவிலே ஆழமாக எண்ணிப் பார்க்கிற ஒரு வாய்ப்பு கவிதைக்கு இருக்கிறது. அவ்வாறு முழுமையாக எண்ணிப் பார்க்கிற வாய்ப்பு கவிதையிலே எப்படி வருகிறது என்று கேட்டால் எங்கே கற்பனை கலக்கிறதோ அங்கேதான் முழுமை வடிவம் பிறக்கிறது.

உண்மையான பகுத்தறிவுக்குக் கற்பனை தேவையில்லை என்று நண்பர்கள் வாதாடக் கூடும். பகுத்தறிவை வலியுறுத்துவதற்குக் கற்பனை தேவைப்படுகிறது. பகுத்தறிவை எண்ணிப் பார்க்கிறபோது கற்பனை தேவையில்லை. அந்தக் கற்பனை அளவோடு கூடிய கற்பனையாக இருக்கிறபோது பகுத்தறிவு சிறக்கிறது.

தந்தை பெரியார் சொன்னதைத்தான் அறிஞர் அண்ணா எழுதினார்: அறிஞர் அண்ணா எழுதியவற்றைத் தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். ஆனால் பெரியார் சொன்ன போது — கேட்கிறபோது நம்முடைய அறிவிலே அது சென்று பதிகிறது. ஆனால் சில நேரத்திலே அது முழு அளவுக்கு நம்மை ஆட்கொள்வதில்லை.

அறிஞர் அண்ணா அதை எழுதுகிறபோது, நாம் அதைப் படிக்கிறபோது இன்னும் சற்று ஆழமாகச் சென்று பதிகிறது. புரட்சிக் கவிஞர் பாடியதைக் கேட்கிறபோது, அந்தப் பாட்டு நம்மையே உலுக்குகிறது. பெரியார் அறிவை உணர்த்துகிறார்; அறிஞர் அண்ணா உணர்ச்சி யோடு கலக்குகிறார்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளத்தையே உருக்குகிறார். ஏனென்றால் அந்தக் கவிதையிலே கலக்கிற கற்பனை உள்ளத்தைக் குழைய வைத்து அந்த உணர்விலே இரண்டறக் கலந்து விடுகிறது......

ஒரு காலத்திலே கவிதைகள் முழு அளவுக்கு இலக்கணக் கட்டுப்பாட்டோடு அமைவது அவசியமாக இருந்தது. அவற்றுக்கு இரண்டு காரணம். ஒன்று கவிதைக்குப் பாதுகாப்பு. மற்றொன்று மக்கள் கவிதை யைப் பாடபேதமுறாமல் பாதுகாக்க அது ஏற்புடையது. அக்காலத்திலே கவிதைகள் இயற்றப்பட்டவுடன் அச் சேற்றப்படுகிற நிலைமை இல்லை. கவிஞன் பாடுவான். எழுதி வைக்காமல் கூட விட்டு விடுவான். இன்னும் இரட்டைப் புலவர்கள் போலே முதல் இரண்டடி ஒரு புலவன் பாட, பின் இரண்டடி மற்றொரு புலவன் பாடுவானேயானால் இரண்டு பேரும் மறந்தாலும் மறக்கலாம். இரண்டு பேருமே மறுபடியும் பாடி அதை நிறைவு செய்தாலும் ஓலைச்சுவடிகளில் எழுதி வைக் கப்படுவது என்ற அளவுக்குமட்டுமே ஓரளவு பாதுகாக் கப்பட்ட காலத்தில், ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துக்கள் தெளிவாக அறிய முடியாத நிலை அமைவ துண்டு. அச்சு இயற்றுகிற காலத்திலே அந்த எழுத்துக்கள் பிரிந்து காணப்படுவதைப் போல சொற்கள் பிரிந்து நிற்பதைப்போல அசை அசையாகக்கூடப் பிரித்துக் காட்டுவதற்கு வாய்ப்பு இருப்பதைப்போல இல்லாத காலத்தில் தொடர்ந்து எழுதுகிறபோது, அதுவும் கூட்டு எழுத்துக்கள் கொண்டு எழுதப்படுகின்ற காலத்தில் ஒரு

கவிதையிலே வருகின்ற சொல், இந்தச் சொல்தானா அவர் பயன்படுத்தியது? அவர் 'கல்' என்று சொன்னரா? 'கள்' என்று சொன்னாரா? அவர் 'வால்' என்று சொன்னாரா? 'வாள்' என்று சொன்னாரா? என்று ஐயம் வருகிறபோது பல்வேறு ஐயங்களை நீக்கிக் கொள்வதற்கு உறுதுணையாக—அவசியமாக இருந்த ஓர் அடிப்படையில் இலக்கண முறையோடு அசை, சீர், தளை இவற்றை யெல்லாம் கண்டு எழுதி வருகின்ற முறை பெருமளவிற்குப் பயன்பட்டது; இன்றியமையாததாகவும் இருந்தது.

ஆனால் இன்று அப்படி அல்ல. புதுக்கவிதை என்று சொன்னால், அது கருத்துகளாலே புதுக்கவிதை என்று ஒருவகையிலே சொன்னால் நான் ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தயார். ஏனென்றால் சில எண்ணங்களைச் சில காலத்தில் சில முறைகளிலே வெளியிடுகிறபோது அது புதுமை பெறுகிறது. அதே எண்ணத்தை இன்னொரு காலத்தில் வெளியிட்டால் அது புதுமை பெறாது. இன்றைக்கு ஒன்று புதுமையாகத் தோன்றும். அது நாளைக்குப் புதுமையாக இருக்காது.

ஒரு பெண் நிறைவெய்துகிறாள் அல்லது புதுமை பெறுகிறாள் அல்லது மலர்ச்சி எய்துகிறாள் என்று சொன்னால் அந்தக் கால கட்டத்திலே அதற்கு மதிப்பு. அது போல புதுக்கவிதை என்று சொல்வது ஒரு கால கட்டத்திலே அது புதுக்கவிதை. இன்னும் ஓர் இருப தாண்டுகள் கழித்து அந்தக் கருத்துகளை நோக்குகிற போது அது சிறப்புடையதாக இருக்குமா? என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால், மக்களுக்குத் தேவைப்படுகிற ஒரு எண்ண ஓட்டத்தை—ஒரு புரட்சி மனப்பான்மையை ஒரு புதுமைச் சிந்தனையை—ஒரு வேகத்தை அல்லது உள்ளக் குமுறலைப் படம் பிடித்துக்காட்டுகின்ற ஓர் ஆற்றலைப் புதுக்கவிதை பெற்றிருக்கிறது என்று சொன்னால் எனக்கு மாறுபாடு இல்லை.

ஆனால் கவிதைகளிலே வருகிற கருத்துகளில் உள்ள அழகு என்பது நீண்ட நெடுங்காலமாக அது கவிதை யோடு உடன் பிறந்தது. அழகு இல்லாத போது அது கவிதை அல்ல; நயம் இல்லாத போது அது 'பா' அல்ல; ஓசையில்லாதபோது அது பாட்டு அல்ல; எனவே அழகு என்பது இயற்கையோடு பொருந்தியது; கவிதையோடு உடன் பிறந்தது. அழகில்லாத கவிதை என்றைக்கும் பிறந்ததில்லை; பிறந்திருந்தாலும் அது வாழ்ந்ததில்லை.

சங்க காலத்திலே பிறந்த கவிதைகளாக இருந்தாலும் இடைக்காலத்திலே நாயன்மார்கள் பாடிய பாடலாக இருந்தாலும், வள்ளலார் அருட்பாவாக இருந்தாலும்— அத்தனையும் கவிதை நலன்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்குவனவே; கருத்துகளிலே வேறுபாடு வரலாம்.

இறைவனை வேண்டி வேண்டி உருகிப்பாடி என்ன பயன்? என்று நம்முடைய புலவர்கள் கேட்கலாம் அல்லது பகுத்தறிவுவாதிகள் கேட்கலாம். ஆனால் பாடியவ னுடைய — பாட்டினுடைய — ஆழமான கருத்துக்கள்; சிறந்த எண்ணங்கள். அந்த எண்ணங்களை நாம் மறந்து விட முடியாது. அந்த அழகை நாம் மறந்து விடமுடியாது. அவையெல்லாம் சேர்ந்துதான் தமிழைக் காப்பாற்றின.

தொல்காப்பியர் இயற்றிய இலக்கணத்தினுடைய காலத்திலே தொடங்கி, அதற்கு முன்னால் இருந்த ஏடுகள் கிடைக்காத காரணத்தால் சங்க இலக்கிய ஏடுகளிலே தொடங்கி, வடலூர் வள்ளலார் பாடல் வரையில் புதுமை எண்ணங்கள் மிகுதியாக இடம்பெறாத அந்தக் காலத்தில் வள்ளலாரிடத்திலே புதுமை எண்ணங்கள் இடம் பெற்றன. மாணிக்கவாசகர் பாடலிலே கூடச்சில புதுமை எண்ணங்கள் இடம் பெற்றன. ஆனால் பக்தி உணர்வோடு கலந்து அது இடம் பெற்றதற்கு மாறாக, பக்தியிலே இருந்து விடுபட்டு, புதிய எண்ணங்கள் வெளிப்படுகின்ற காலமாக

—தொடக்க காலமாக பாரதியார் காலமும் அதை நிறைவு செய்கிற காலமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய காலமும் அமைந்திருக்கிறது என்று நான் கருதினாலுங்கூட இடையீடில்லாமல் தமிழைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருந்த ஏடுகள் என்ற வகையிலே அவையெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும், அவற்றைப் பாதுகாக்கின்ற உணர்வும் நமக்கு வேண்டும்.

தமிழ் மொழியினுடைய வளத்தை அந்த ஏடுகள் பாதுகாத்தன. தமிழ்மொழியாலே முடியும் என்ற நம்பிக்கைக்கு அவை உறுதுணையாக இருந்தன. தமிழ் அழியாமல், தமிழ் மொழி இருக்கிற இடத்திலே வேறு மொழி இடம் பெற்றுவிடாமல் தடுப்பதற்கு அவை காரணமாக இருந்தன. அந்த ஏடுகளெல்லாம் துணை நின்றன. அந்தக் கவிதைகளிலே காணப்படுகின்ற கட்டுப்பாடு அல்லது மரபு போற்றுதல் அல்லது எழுத்து, சீர், தளை இவற்றைப் பாதுகாத்தல் இன்றியமையாத ஒரு கடமையாக இருந்தது என்றுதான் நான் கருதுகிறேன்.

[18-11-81 அன்று அருப்புக் கோட்டையில் இலக்கிய அணி சார்பாக நடைபெற்ற ''கலைஞர் கவிதைகள் திறனாய்வு'' நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]

□ □ □

# இளங்கவிஞர்கள் சிந்தனைக்கு

சிலர் இயற்கையிலேயே கவிதை பாடுவார்கள்; சிலர் முயற்சியினாலே கவிதை பாடுவார்கள்; சிலர் சில சூழ்நிலைகளில் மட்டும் கவிதை இயற்றுவார்கள்; ஆனால் தொடர்ந்து அவர்களால் கவிதை எழுத முடியாது. ஆனால் கவிதையில் நாட்டமுடையவர்கள் தொடர்ந்து மிகச் சிறந்த கவிதைகளைப் படைப்பதிலே ஈடுபட்டு வருவார்களேயானால் அவர்களையும் அறியாமல் ஒரு புதிய எழுச்சி பிறக்கும்; புது ஆர்வம் பிறக்கும். கவிதை எழுதுவதற்கு இலக்கணம் படியுங்கள் என்று சொல்லத் தேவையில்லை. பல்வேறு இலக்கியங்களைப் படியுங்கள் என்று சொன்னாலும், அதைக் கொண்டு கவிதை எழுத முடியாது. மிகப் பெரிய கவிஞர்களோடு நீங்கள் ஒன்றாகி விடுங்கள். பாரதியாரோ பாரதிதாசனோ அல்லது வேறு எந்த ஒரு கவிஞனோ, நீங்கள் அந்தக் கவிஞர்களோடு ஊடாடி, அவர்கள் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளையெல்லாம் அவர்கள் எந்த வகையிலே வெளியிடுகிறார்கள் என்று எண்ணி, அந்த எண்ணத்தோடு நீங்கள் முயல்வீர்களேயானால் உங்களிலிருந்து அந்தக் கவிஞர்கள் வேறு வடிவம் பெற்று வெளியே வருவார்கள்.

கவிஞருடைய கற்பனை என்பது சிலருக்கு இயல்பாக வந்தாலும்கூட, பலருக்குப் பல்வேறு கவிஞர்களிடம் கொண்டிருக்கிற நாட்டத்தினாலேதான் உருவாகும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மிகப் பெரிய ஆற்றல் மிக்க கவிஞர்தான் என்று சொன்னாலும் தேசியகவி பாரதியாருடைய சாயல்—அவருடைய கவிதைகளில் பாரதிதாசனுக்கு ஏற்பட்ட ஈடுபாட்டிலே—பாரதியாரிடத்திலே

அவருக்கு ஏற்பட்ட பற்றுதலாலே, பாரதி ஒருவன்தான் கவிஞர்களில் வீரன்; அஞ்சாத நெஞ்சு படைத்தவன்; அவனைப்போல் நாம் கவிஞராக வேண்டும் என்ற எண்ணம் அவருடைய உள்ளத்திலே தோன்றியதன் விளைவுதான் பாரதிதாசனை புரட்சி உணர்வு மிக்கவராக மாற்றியது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

அதேபோல் பாரதியாருடைய உள்ளத்திலே அவருக்கு முன்னாலே வாழ்ந்த கவிஞர்களின் கவிதைகளிலே ஏற்பட்ட ஈடுபாடுதான் அவருடைய கவிதைகள் மக்கள் படித்து உணரத்தக்க அந்த நடையில் வெளிப்பட்டன என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் — கவிஞர் களைப் பற்றி கொண்டிருந்த கருத்து என்ன? பல பாடல் களைத் திரும்பத் திரும்பப் பாடுகிற கவிஞர்களாகத்தான் பல பேர் இருப்பார்கள்; வழக்கத்தால் மாடுகள் செக்கைச் சுற்றும் என்பதே தன் காலத்து நடையைப்பற்றி அவர் சொன்ன கருத்து.

இன்றைய தினம் வழக்கத்தால் செக்கைச் சுற்றி வருபவர்கள் மட்டுமல்ல; திசை தெரியாமலே செக்கைச் சுற்றி வருபவர்கள் பல பேர் இருக்கிறார்கள். எந்த நோக்கத்தோடு கவிதை இயற்ற வேண்டும்; எந்த நோக்கம் நாட்டுக்கு நன்மை பயக்கத்தக்கது; எந்த உணர்வு மக்களிடத்திலே வளரத்தக்கது என்பதை எண்ணிப் பார்க்க முடியாதவர்களாக பல இளங்கவிஞர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஒரு திருவள்ளுவர் தோன்றினார். எந்த அடிப் படையிலே திருவள்ளுவர் தோன்ற முடிந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வடமொழியிலே தோன்றிய புலவர்களில் திருவள்ளுவருக்கு ஈடாக ஒரு புலவன் அன்றும் இன்றும் தோன்றியதே இல்லை.

அதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப்பார்த்தால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களுடைய வாழ்விலே வகுத்து வைத்திருந்த ஒரு பண்பாடு—மிகச் சிறந்த சீலங்கள் — மிகச் சிறந்த ஒழுக்கத்தினுடைய மதிப்பீடுகள் — உயர்ந்த வாழ்க்கை நோக்கங்கள் இவைகளெல்லாம் வள்ளுவன் மூலம் வெளி வந்து உலகத்திற்கு வழிகாட்டக்கூடிய அளவில் விளங்கின.

எனவே அப்படிப்பட்ட வள்ளுவர் பிறக்கக்கூடிய அளவுக்கு வள்ளுவருக்கு முன்னாலே பல வள்ளுவர்கள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு. கம்பன் பிறக்கக்கூடிய அளவுக்கு கம்பருக்கு முன்னாலே பல்வேறு கவிஞர்கள் வளர்ந்த நாடு தமிழ்நாடு. இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றக்கூடிய அளவுக்கு முத்தமிழும் முழங்குகின்ற சிறப்பைப் பெற்றது தமிழ்நாடு.

கம்பருக்குப் பின்னாலே பக்தி உணர்விலே ஈடுபட்டிருந்தாலும்கூட திருவாசகத்தின் மூலமாக தமிழ் செழிக்கக்கூடிய நிலையைப் பெற்றது தமிழ்நாடு. அவருக்குப் பின்னாலே எத்தனையோ புலவர்கள்!

இப்படி ஒரு பாரம்பரியமாக வளர்ந்தவர்களை இன்றைக்கு இருக்கிற இளங்கவிஞர்கள் எண்ணிப் பார்த்தால் உங்களுக்கு இருக்கிற தமிழ்ச்செல்வம், படித்துப் படித்து மகிழக்கூடிய அளவுக்கு கவிதைச் செல்வம், கருத்துச் செல்வம், இலக்கியச் செல்வம் உலகத்திலே வேறு எந்த மொழிக்காரனுக்கும் இந்த அளவு இல்லை.

அதே நேரத்திலே கவிஞர்களுக்குக் குறிக்கோள் ஒன்று வேண்டும். அது, உள்ளத்திலே மிக ஆழமாகப் பதிந்தால் தான் அழுத்தம் பெற்ற கவிஞர்களாக ஆக முடியும்.

வாழ்வினைப் பற்றி — சமுதாயத்தைப் பற்றி மக்களிடத்திலே பரப்ப வேண்டிய எண்ணங்களைப் பற்றிய தெளிவு வேண்டும்.

[4-11-82 அன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற 'தாய்மண்' இலக்கியக் கழக விழாவில் பேராசிரியர் ஆற்றிய உரையிலிருந்து தொகுத்தது.]

□ □ □

# இளைய தலைமுறையின் எண்ண ஓட்டம்

பச்சையப்பன் கல்லூரியில் கடந்த முப்பதாண்டு காலமாக நான் பல விழாக்களில் பேசியிருக்கின்றேன். இன்று நடைபெறும் இந்த இனிய விழாவில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தக் கல்லூரியில் பணியாற்றிய டாக்டர் மு.வ. அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருப்பாரேயானால், தமிழ் அதனாலே பல மடங்கு வளர்ச்சி பெற்றிருக்க முடியும். பச்சையப்பன் கல்லூரிக்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கே மிகப் பெரிய பெருமை சேர்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

அவர்களெல்லாம் உலவிய இந்தக் கல்லூரியிலே பயிலுகிற மாணவர்கள் அவர்கள் ஆற்றிய தொண்டினால் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் கிடைத்த பெருமையில் ஒரு பங்கு எதிர்காலத்தில் நம்மாலும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு காலத்திலே தமிழர்களைப் போல் உலகம் வியக்கத்தக்க வாழ்வு பெற்றிருந்தவர்களும் இல்லை. இன்றைக்குத் தமிழர்களைப் போல் உலகத்தில் உதாசீனப் படுத்தப்பட்ட — ஒதுக்கிவைக்கப்பட்ட — தள்ளிவைக்கப் பட்ட பொருட்படுத்தப் படாத இனமும் வேறில்லை.

அலைகடலுக்கு அப்பால் இருந்த நாடுகளை யெல்லாம் வெல்லுவதற்குப் படையோடு சென்று, வென்ற தமிழ் மன்னர்கள் வாழ்ந்த மண்தான் இந்த மண்!

இன்றைக்குப் படையில்லாமலே எவனும் வெல்லக் கூடிய மண்ணாக ஆகிவிட்டதும் இந்த மண்தான்!

உலகம் வியக்கத்தக்க அளவிற்கு உயர்ந்த கருத்துச் செல்வத்திற்குச் சொந்தக்காரர்கள் — உரிமையுடைய வர்கள் தமிழர்கள் என்று கருதக்கூடிய சான்றுகளைப் பெற்றவர்கள்தான் நாம்!

தேசிய கவி பாரதியார் ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடியிருக்கின்றார்.

தேசியக் கட்சிகள் தோன்றாத காலத்தில் — மொழி வாரி மாநிலம் என்று எண்ணப்படாத காலத்தில் வடமொழி மிக உயர்ந்த மொழி என்று தமிழ்நாட்டிலே உள்ள தலைவர்கள் பலரும் ஏற்றுக் கொண்டிருந்த காலத்திலே வாழ்ந்த பாரதியார்தான் நம் மொழியின் சிறப்புப் பற்றி இவ்வளவு தெளிவாக அழகாகப் பாடி யிருக்கிறார்.

அந்த உணர்வு தமிழர்களாகிய நம்மிடம் தழைத் தோங்கவில்லை. மாணவர்களாகிய நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன், நான் மாணவனாக இருந்த போது, தமிழ் உணர்வுக்கு தமிழ்ப் பற்றுக்கு எவ்வளவு முதன்மையிருந்தது என்பதைப்

பார்த்தேன். நான் ஆசிரியராக இருந்தபோது அது தொடர்ந்த வரலாற்றினையும் பார்த்தேன். இன்றைக்குத் தமிழ் உணர்வு என்பது மாணவர்களிடத்திலே அமுங்கிப் போய்விட்டது. அதற்காக வருத்தப்படுகிறேன். மாணவர்களை நான் குறை கூறுவதாகக் கருதக்கூடாது. இன்றைக்கு மாணவர்களும் சரி — பொதுமக்களும் சரி பல்வேறு விதமான கருத்துக்களுக்கிடையிலே, கருத்து மோதலுக்கிடையிலே மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

இன்றைக்கு ஒரு மாணவனுடைய கவனம் பல்வேறு வகையிலே சிதறிப் போவதால் மொழிப்பற்று — நாட்டுப் பற்று கடமை உணர்வு ஆகிய இவற்றில் அவனது ஆர்வம் குறைந்துவிடுகிறது.

உங்களுக்குப் புரிவதற்காக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய மாணவர்கள் விளம்பரம் உள்ள இடங்களில் நமக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்குமா என்கிற நிலைக்கு ஆளாகிறார்கள். கல்லூரியில் பணியாற்றும் உங்களைப் போன்ற பேராசிரியர்களுக்கு கிடைக்கின்ற விளம்பரங்களை விட வேறு எத்தனையோ வகையிலே கிடைக்கிற மிகுதியான விளம்பரத்தாலேதான் இந்த நாடே கெட்டுப் போயிருக்கிறது.

இந்த விளம்பரங்களே தவறு என்பது என்னுடைய வாதமல்ல இனம் மொழி — நாட்டிற்காகப் பயன்படாத வகையிலான விளம்பரங்களைக் கண்டு மக்களோ, மாணவர்களோ மயங்குவதுதான் தவறு என்று கூற விரும்புகிறேன்.

அறிவுள்ளவர்கள், சிந்திக்கக் கூடியவர்கள், ஆற்றல் உள்ளவர்கள் நம்முடைய மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூடியவர்கள். உண்மை என்ன? நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடியது என்ன? எந்தக் கருத்திற்கு நாம் முதன்மை கொடுக்க வேண்டும்? யார் சொல்கிற கருத்தில்

சொல்கின்றவர்கட்கே உண்மையான நம்பிக்கையிருக்கிறது? என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களெல்லாம் நாள்தோறும் மக்களைச் சந்தித்து சாதாரண பாமர மனிதனைக்கூட சிந்திக்கத் தூண்டிக் கொண்டிருந்த காரணத்தாலேதான் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

கொள்கையைச் சொல்வதற்காக விளம்பரம் தேடுவது தவறல்ல. விளம்பரம் பெறுவதற்காகக் கொள்கையைச் சொல்வது போன்று செயற்படும் முறை ஏற்படுகிற காரணத்தாலேதான் நான் இதைச் சொல்கிறேன். ஒரு கொள்கைக்காக — ஓர் இலட்சியத்திற்காக விளம்பரம் பெறுவது என்பது போற்றப்பட வேண்டிய ஒன்று. ஆனால் இன்றைக்கு அப்படி இருக்கிறதா என்றால் இல்லை.

நான் இவைகளைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இளைஞர்கள் எதையும் ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒரு துணிவு, ஓர் ஆர்வம் கொள்ள வேண்டும். எது உண்மை? எது பொய்? எது நீதி? எது அநீதி? எது மக்களுக்காக? எது மக்களைக் கெடுப்பதற்காக? எது சுயநலத்திற்காக? எது பொது நலத்திற்காக? அதை எண்ணிப் பார்த்து இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைமுறை நடைபோட வேண்டும்! நாளை உங்களை நம்பித்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது. உங்களை நம்பி, உங்களுடைய குடும்பம் இருப்பதைப் போல — உங்களை நம்பித்தான் வருங்காலத் தமிழகம் இருக்கிறது. மேலும் கூறுவதெனில் உங்களை வைத்துத்தான் சனநாயகமே இருக்கிறது. மக்கள் உரிமையைக் காத்து நிற்கும் மக்கள் ஆட்சியே இருக்கிறது.

எனவே உங்களையும் காப்பாற்றிக் கொண்டு உங்களுடைய தாய்மொழியையும் காப்பாற்றிக் கொண்டு

தமிழ் நாட்டையும் காப்பாற்றி ஜனநாயக உரிமையைக் காப்பாற்றுவதற்கு உங்களையே நீங்கள் தயாரித்துக் கொள்ளவேண்டும். உங்களை ஆற்றல் மிக்கவர்களாக உயர்த்திக்கொள்ள வேண்டும். உங்களுக்கென்று ஒரு குறிக்கோள் ஒவ்வொருவர் மனதிலும் ஏற்படவேண்டும். இலட்சியம் — கொள்கை — தாய்மொழிப் பற்று — தாய் நாட்டுப் பற்று ஆகியவற்றைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்த உயர்நிலையை நீங்கள் பெறுவதன் மூலமாக தமிழ் நாட்டிற்கு, தமிழ் மொழிக்கு நீங்கள் பெருமை சேர்க்க வேண்டும்!

[10—3—88 அன்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பாக நடை பெற்ற முத்தமிழ் விழாவில் பேராசிரியர் ஆற்றிய உரை — நன்றி : முரசொலி]

□ □ □



பேராசிரியர்

''காட்டூரில் பிறந்தவர்தாம்
அறிஞர் அண்ணா
காட்டும்ஊர் செல்கின்ற
கடமை வீரர்!
நோட்டூரில் மயங்காத
கொள்கைத் தங்கம்
நொடிப்பொழுதும் சோராத
ஆண்மைச் சிங்கம்!
ஏட்டூரில் 'புதுவாழ்வு'
கண்ட ஏந்தல்!
எழுத்தூரில் புகழ்மகுடம்
பெற்ற அன்பர்!
பாட்டூரில் பவனிவந்த
பாவேந் தர்தம்
பாராட்டை அந்நாளில்
பெற்ற செம்மல்!''

— முனைவர் மு. பி. பா.

Wrapper Printed at Eskay Art Printers Madras-600 005